தமிழ்நாடு

# நுகர்விழி

மாத இதழ்

நுகர்வோரின் மூன்றாவது கண்!

10/- மலர் - 14 இதழ் -12 டிசம்பர் - 2020 TAMILNADU NUGARVIZHI

facebook TNCPO Chennai

## லஞ்ச ஒழிப்புப் புகார் அளிப்பது எப்படி?

போலிகளுக்கு கிடுக்கிப்பிடி போடும்

## புதிய நுகர்வோர் ஆணையம்




PUBLISHED BY: TAMILNADU CONSUMER PROTECTION ORGANISATION CHENNAI

Wish you Happy Christmas



**Dr. D.C.ஜான்இளங்கோ**
மாநிலத் தலைவர் மற்றும்
காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர்
81227 35037



**K.தாந்தோணி**
மாநில இணைச் செயலாளர்
தமிழ்நாடு
99625 26601



**L.மயில்வாகனம்**
மாநில அமைப்புச் செயலாளர்
96001 29030



**D.விஜய்**
மாநில துணைத் தலைவர்
திருவொற்றியூர் மண்டல தலைவர்
99404 77815



**M.R.ஆனந்தன்**
மாநில துணைச் செயலாளர்
98846 68673



**M.பிரபாகர்**
மாநில துணைச் செயலாளர்
94443 31396



**சிந்து R.சுப்பிரமணியம்**
மாநில துணைப்பொதுச் செயலாளர்
98431 88657



**K.தனசேகர்**
மாநில துணை பொதுச் செயலாளர்
98410 91317



**M.ரவி**
மாநில நிர்வாகக் கமிட்டி ஆலோசகர்
92827 47175



**A. விவேக்**
மாநில இயக்குனர்,
தரக்கட்டுப்பாடு குழு
97899 66012



**J.செல்வம்**
மாநில அமைப்பாளர்
82200 82727



**J.Y.ஜேம்ஸ் ஜெயராஜ்**
மாநில துணைத் தலைவர்
94433 24132



**M.சுரேஷ்குமார்**
மாநில இணை ஒருங்கிணைப்பாளர்
96772 79744



**K.ஜெயகுமார்**
மாநில நிர்வாகக் கமிட்டி ஆலோசகர்
63793 50549



**V.பாலாஜி**
மாநில உதவிச் செயலாளர்
89251 37737



**K.N. அக்பர்**
மாநில இளைஞரணி துணை ஒருங்கிணைப்பாளர்
99415 55585

## பேரமைப்பின் மாநில நிர்வாகிகள்

ADVT

தமிழ்நாடு
# நுகர்விழி
நுகர்வோரின் மூன்றாவது கண்!
மாத இதழ்

## வாசகர் கவனத்திற்கு

தமிழ்நாடு நுகர்விழி வாசகர்கள் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவை வரவேற்று தங்களை பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் தங்களின் கருத்துக்கள், கட்டுரைகள், வினாக்கள், விமர்சனங்கள், தங்கள் பகுதியில் பொது மக்களுக்கு செய்த உதவிகள் போன்றவற்றை எங்க ளுடைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள் கிறேன். நாங்கள் அதை இப்புத்தகத்தில் பிரசுரிக்கிறோம்.

நன்றி, வணக்கம்.

### அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

ஆசிரியர்

**தமிழ்நாடு நுகர்விழி**

எண்.359 G, கொன்னூர் நெடுஞ்சாலை
பில்கிங்டன் சாலை சந்திப்பு (சயானி
தியேட்டர் பஸ் நிலையம் அருகில்)
அயன்புரம்,
சென்னை – 600 023.
தொலைபேசி எண்: 044–43324844
கைபேசி எண்: 9444909993

இதழில் வெளிவரும் விளம்பரங்கள் நம்பகத் தன்மைக்கு “தமிழ்நாடு நுகர்விழி” பொறுப்பல்ல. நேர்காணல் மற்றும் சிறப்பு கட்டுரையாளரின் கருத் துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துகளே. பிரஸ் அண்டு ரெஜிஸ்ட்ரேஷன் ஆஃப் புக்ஸ் ஆக்டின்படி செய்திகளின் தேர்வுக்கு செய்தி நிர்வாக ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

## உள்ளே...

எக்ஸ் பார்ட்டி தீர்ப்பு என்றால் என்ன? — 5
பட்டா, சிட்டா, அடங்கல் — 10
சுஃகுள் நிறுவனம் சட்ட விரோதமாக மேலாதிக்கம்: — 14
அம்பேத்கார் ஏன் சிறை செல்ல வில்லை? — 16

# நீர்சேகரிப்பை பொதுப்பணித்துறை உறுதி செய்ய வேண்டும்

**2015** ல் சென்னையை புரட்டிப்போட்ட பெருவெள்ளத்திற்கு பிறகு, தமிழகத்தை ரொம்பவே மிரட்டி விட்டுச் சென்றிருக்கிறது, நிவர் புயல். வங்கக்கடலில் புயலாக உருவெடுத்த நாள்முதல் அது கரையைத் தொடும் நேரம் வரை நிவர் பற்றி வெளியான தகவல்கள் எல்லாமே திகிலூட்டக்கூடியதாக இருந்தது. ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு பெரும் சேதம் ஏதும் இல்லாமல் நிவர் புயலிடமிருந்து தமிழகம் தப்பிவிட்டது.

இதற்கு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுக்குரியது. ஆனால், பாதிப்பு பெரிதும் ஏற்படாத பாதையை நிவர் தேர்ந்தெடுத்ததுதான் பாதிப்பு குறைவுக்கு காரணம் என்பது நிபுணர்களுக்கு தெரிந்த உண்மை.

இருந்தபோதும் முதல்வர் எடுத்த நடவடிக்கைகள் மதிப்பிட்டுவிட முடியாது. அரசு தலைமை அதிகாரிகள் முதற்கொண்டு கிராம பஞ்சாயத்து உதவியாளர் வரை எல்லாரும் களத்தில் நின்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததையும் புயல் கடந்து சென்ற வழித்தடங்களில் சீரமைப்பு பணிகள் மேற்கொண்டதையும் பாராட்டியே தீர வேண்டும். அதேநேரம் இந்த முன்னேற்பாடுகளில் நாம் கவனம் செலுத்த வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. அவற்றில் முதன்மையானது, பயிர்காப்பீடு. பொதுவாக புயல் மழை என்றாலே முதலில் சேதமடைவது பயிர்கள்தான். அந்த சமயங்களில் விவசாயி நஷ்டம் அடையாமல் இருப்பதற்காகவே பயிர் காப்பீடு இருக்கிறது. ஆனால், காப்பீடு பிரீமியத்திற்காக சில ஆயிரங்களை செலவு செய்யத் தயங்கி, பேரிடர் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்ற மெத்தனம் விவசாயிகளிடம் இருக்கிறது.

இதில் வருவாய்த்துறை, முன்கூட்டியே கவனம் கொடுத்து கிராம நிர்வாக அதிகாரிகளை முடுக்கிவிட்டு பயிர் காப்பீட்டை முழுமையாக முடித்திருந்தால் இழப்பீடு என்ற பெயரில் அரசுக்கு பெரும் சுமை இருக்காது. அடுத்து, பெருநகரங்களில் சாலையோரம் கட்டப்பட்ட பேனர் மற்றும் பெயர் பலகைகள் சில சூறைக்காற்றில் பெயர்ந்து சாலையில் விழுந்து விபத்து ஏற்பட்ட பிறகுதான் அவற்றை அகற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் முன்கூட்டியே செய்திருந்தால் விபத்துகளை தவிர்த்திருக்கலாம்.

தமிழகம், ஆண்டு முழுவதும் பெறும் மழைப்பொழிவில் 48 சதவீத மழையை, வடகிழக்கு பருவமழை தருகிறது. தென்மேற்கு பருவமழைக் காலத்தில் 32 சதவீத மழைப்பொழிவை பெறுகிறது. இந்த ஆண்டு, தென்மேற்கு பருவமழைக் காலத்தில் வழக்கத்தைவிட சற்று கூடுதலான மழை கிடைத்தது. ஆனால், தமிழகத்தின் தண்ணீர் தேவையில் பெரும் பகுதியை பூர்த்தி செய்யும் வடகிழக்கு பருவமழை, இந்த ஆண்டு வழக்கத்தைவிட சற்று குறைவாகவே இருக்கும் என்று வானிலை ஆய்வு மையங்கள் கணித்துள்ளன.

அதாவது, வடகிழக்கு பருவமழை மிகத் தீவிரமாக இருக்கும் 2 மாதங்களில், அக்டோபரை பொறுத்தவரை, பெரிய அளவில் மழையில்லை. நவம்பரில் பெய்யத் தொடங்கியுள்ள மழையால் தமிழகத்தில் நீர்நிலைகள் பரவலாக நிரம்பி வருகின்றன. சென்னைக்கு குடிநீர் ஆதாரமாக இருக்கும் ஏரிகளும் நிரம்பி வருகின்றன.

இந்த தண்ணீரை முறையாகவும் முழுமையாகவும் சேமித்து வைக்காவிட்டால், எதிர்வரும் கோடையில் தண்ணீர் பற்றாக்குறையை சந்திக்க நேரிடும் அபாயம் உள்ளது. மழைபெய்யும்போது நீர்நிலைகள் நிரம்பினால், நீர்நிலைகளை ஆக்கிரமித்தவர்கள், அவர்கள் கட்டடங்கள், நீரில் மூழ்காமல் இருக்க நீர்நிலைகளின் மதகுகளை திறந்துவிட்டுவிடுவதும் மறுபுறத்தில் கரைகளை உடைத்துவிடுவதும் கடந்தகாலங்களில் நடந்ததுண்டு. அதுபோன்ற சதிகள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, தமிழகம் முழுவதும் உள்ள நீர்நிலைகளில் பெரும்பாலானவை குடிமராமத்து திட்டத்தின் கீழ் சமீபத்தில் சீரமைக்கப்பட்டன. நீர்நிலைகளின் கரைகள், மதகுகள் பழுது பார்க்கப்பட்ட பிறகு, நீர்நிலைகளில் அதன் முழு கொள்ளவுக்கு நீர் சேகரமாகும்போது, கரைகளில் கொட்டிய மண் அரிப்பால் கரை உடைப்பு, மதகுகள் உடைப்பு போன்றவை நடக்க வாய்ப்புகள் உள்ளன. அந்த காரணங்களால் சேகரமான மழைநீர் வீணாகும் அபாயங்கள் இருக்கின்றன.

அப்படி எதுவும் நடக்காமல் மழையால் கிடைக்கும் தண்ணீரை கொண்டு, நீர்நிலைகள் அதன் முழு கொள்ளவுக்கு நீர் சேகரிப்பதை பொதுப்பணித்துறை உறுதி செய்ய வேண்டும். இந்த கண்காணிப்பில் அந்தந்த பகுதி மக்களுக்கும் பொறுப்பு உள்ளது.

டாக்டர். **C.பால் பர்ணபாஸ்**
நிர்வாக ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்

டாக்டர் **N.கன்னையா**, Phd
முதன்மை ஆசிரியர்



# எக்ஸ் பார்ட்டி தீர்ப்பு என்றால் என்ன?

**நீதிமன்ற வளாகத்தில் எக்ஸ்பார்ட்டி என்ற வார்த்தை மிகவும் பிரபலமானது.**

இது எந்தெந்த சூழ்நிலைகளில் நிகழ்கிறது?

நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுப்பவரை வாதி (Plaintiff) என்கிறோம். அவர் யார் மீது வழக்கு தொடுக்கிறாரோ அவரை பிரதிவாதி (Defendant) என்கிறோம்.

சிவில் வழக்குகளில் வாதியானவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவுடன், அங்கிருந்து பிரதிவாதிக்கு சம்மன் அமீனா மூலமாகவோ, தபால் துறை மூலமாகவோ அனுப்பப்படும்.

இது போன்று வரும் கடிதங்களையோ, சம்மன்களையோ அதற்கு உரியவர்கள் வாங்க மறுக்கக் கூடாது. Refused என்று எழுதி அனுப்பப்பட்டிருந்தாலும் அந்த கடிதத்திலுள்ள அல்லது அந்த சம்மனில் உள்ள விஷயங்களை நீங்கள் முழுமையாக அறிந்து கொண்டதாகத்தான் நீதிமன்றம் முடிவு செய்யும்.

அதனால், Refused என்று எழுதி அனுப்பப்பட்ட சம்மன்களினால்கூட அந்த வழக்குகளில் உங்களுக்கு எக்ஸ்பார்ட்டி தீர்ப்பு வரும்.

நல்ல வழக்கறிஞரிடம் வழக்கை நீங்கள் ஒப்படைத்து இருந்தாலும், குறிப்பிட்ட நாளில், உரிய நேரத்தில் அவர் நீதிமன்றத்தில் ஏதோ ஒருகாரணத்தால் ஆஜராகவில்லை என்றால், அந்தவழக்குகளில் உங்களுக்கு எக்ஸ்பார்ட்டி தீர்ப்பு வரும்.

ஒருவர் ஆஜராகாத அன்றே எந்த நீதி மன்றமும் தீர்ப்பு வழங்குவதில்லை. சில மாதங்கள் கழித்துதான் தனது தீர்ப்பை நீதிமன்றம் வழங்கும். ஆஜராகாதவர்கள் அதற்குள் இதற்கு பரிகாரம் தேடிக்கொள்லலாம்.

ஆஜராகாத சூழ்நிலையில் அடுத்து என்ன செய்ய வேண்டும்?

எந்த நாளில் ஆஜராகவில்லையோ, அந்த நாளில் இருந்து முப்பது நாட்களுக்குள், ஆஜராக முடியாத உண்மையான நிலை குறித்து நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும். அது பற்றி வாதியிடம் கருத்து கேட்ட பின்னர் நீதிமன்றம் முடிவு செய்யும்.

அந்த முப்பது நாட்களுக்குள் தங்கள் சூழ்நிலையை நீதிமன்றத்தில் தெரிவிக்க முடியாத நிலையிலும் சிலர் இருப்பார்கள். அவர்கள் condone delay application என்றவிண்ணப்பத்தை கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டும்.

தங்கள் கோரிக்கை உண்மையாக இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும். அதற்கு சில வகைகளில் செலவுத்தொகையினை செலுத்த கோர்ட் உத்தரவிடும்



## ஒருவரை கைது செய்ய

# காவல்துறைக்கு உள்ள அதிகாரம்!

**ஆம் இருக்கிறது.**

**எந்த மாதிரியான சூழ்நிலையில் ஒருவரை கைது செய்யலாம் என்று குற்றவியல் நடைமுறைச் சட்டம், அத்தியாயம் 5 ல் கூறப்பட்டுள்ளது. பிரிவுகள் 41 முதல் 60A வரையிலான பிரிவுகள் காவல்துறையினருக்கு கைது செய்யும் அதிகாரத்தை வழங்கியுள்ளது.**

ஒருவர் கைது செய்வதற்குரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டால் அவரை கைது செய்யலாம். அதிலும் குறிப்பாக கொலை, கொள்ளை,கூட்டுக்கொள்ளை, கற்பழிப்பு ஆகிய நான்கு குற்றங்களில் மட்டுமே கட்டாயமாக கைது செய்ய வேண்டும். மற்ற குற்றச் செயல்களை பொறுத்தவரையில் கைது கட்டாயமில்லை தேவைப்பட்டால் மட்டுமே கைது செய்ய வேண்டும்.

அதென்ன தேவைப்பட்டால் கைது?

இதற்கும் விளக்கம் உள்ளது.

பிரிவு 411(b) (2) ன்படி 7 வருடத்திற்கு உட்பட்ட தண்டனைக்குரிய குற்றங்களில் யாரையும் கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதனையும் மீறி கைது செய்தே தீர வேண்டும் என்றால் அதற்கு சில நிபந்தனைகள் இருக்க வேண்டும்.

ஒன்று அந்த நபர் மேலும் குற்றம் செய்வதை தடுப்பதற்காக

இரண்டு அந்த நபர் சாட்சிகளை கலைத்து விடுவார் - சாட்சியங்களை அழித்து விடுவார் என்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருக்கும் போது..

மூன்று வழக்கின் விசாரணைக்கு வராமல் வெளிநாட்டுக்கு தப்பி ஓடி விடுவார் எனும் போது மட்டுமே ஒருவரை கைது செய்ய வேண்டும்.

இந்த பிரிவானது 1.11.2010ம் தேதியிட்ட குற்றவியல் சட்டத்திருத்தத்தின் மூலம் அமலுக்கு வந்துள்ளது.

அடுத்த பிரிவு 41A

குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு விசாரணை நடத்துவது தொடர்பாக அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்று கூறும் பிரிவு. இதுவும் 2010 ஆம் ஆண்டு சட்டத் திருத்தம் மூலம் அமலுக்கு வந்துள்ளது.

7 வருடத்திற்கு உட்பட்ட தண்டனைக்குரிய குற்றங்களில் புகாரை பெற்றவுடன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு இந்த பிரிவின் கீழ் அறிவிப்பு அனுப்ப வேண்டும். அதன்பிறகு விசாரணை நடத்தி நடவடிக்கைகளை தொடங்க வேண்டும்.

உச்சநீதிமன்றம் Johinder Singh Vs state of U. P (AIR-1994-SC1349)

Baghwan Singh Vs State of Punjab (1992-SCJ-361)

2.7.2014 ல் வழங்கப்பட்ட Arnesh Kumar Vs state of bihar

ஆகிய வழக்குகளில் கைது செய்வது எப்படி என்று காவல்துறையினருக்கு உச்சநீதிமன்றம் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

7 வருடத்திற்கு உட்பட்ட தண்டனைக்குரிய குற்றங்களில் யாரையும் கைது செய்ய வேண்டிய



அவசியம் இல்லை. அதனையும் மீறி கைது செய்தே தீர வேண்டும் என்றால் அதற்கான காரணத்தை காவல்

துறையினர் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும். அந்த அறிக்கையில் கைதுக்கான காரணத்தை கூற வேண்டும். அந்த அறிக்கையே குற்றவியல் நடுவர் படித்து திருப்தி அடைய வேண்டும். கைதுக்குரிய காரணம் ஏற்புடையதாக இருக்கும் பட்சத்திலேயே ரிமாண்ட் செய்ய வேண்டும். இல்லையென்றால் எதிரியை விடுவிக்க வேண்டும். தவறினால் சம்மந்தப்பட்ட காவல்துறையினர் மற்றும் நீதிபதி மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலே கண்ட வழக்குகளில் உச்சநீதிமன்றம் தீர்ப்புகள் வழங்கியுள்ளது.

சாத்தான்குளம் விவகாரத்தில் இறந்து போன அப்பாவிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 188,269,294(பி),353,506(2) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது.

மேற்படி குற்றங்கள் அனைத்துக்குமே அதிகபட்ச தண்டனை 3 முதல் 6 மாதங்கள் மட்டுமே. 506(2) பிடியாணை வேண்டாக் குற்றம் என்று பெரும்பாலானோர் கருதுகிறீர்கள். அது உண்மையல்ல. அபாயகரமான ஆயுதங்களை கையில் தாங்கி கொலை மிரட்டல் விடுத்தால் மட்டுமே 506(2) பொருந்தும். இதற்கு 7 வருடம் வரை தண்டனை உண்டு. மற்றப்படி 6 மாதமே தண்டனை.

ஆக இறந்து போன அப்பாவிகள் மீது பதியப்பட்ட பிரிவுகள் எல்லாமே ஜாமீனில் விடும் குற்றங்களாகும். எனவே இந்த வழக்கில் அவர்களை கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

சட்டவிரோதமாக பொய் வழக்கு பதிவு செய்து அடித்து உதைத்து ரிமாண்ட் செய்ய குற்றவியல் நடுவரிடம் அரைப்பிணமாக கொண்டு சென்றிருக்கிறார்கள்.

நடுவராவது சட்டப்படி நடந்து கொண்டாரா?

இல்லை ரிமாண்டை ஏற்றுக் கொள்ளும் முன் இவர்கள் மீது பதியப்பட்ட குற்றங்கள் அனைத்தும் ஜாமீனில் விடக்கூடியவையே. ஏன் கைது செய்தீர்கள் என்று கேட்டிருக்க வேண்டும். 7 வருடத்திற்கு உட்பட்ட தண்டனைக்குரிய குற்றங்களில் யாரையும் கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி அவர்களை சொந்த ஜாமீனில் விட்டிருக்க வேண்டும். காயங்கள் குறித்து கேட்டறிந்திருக்க வேண்டும். ஆனால் இது எதையும் குற்றவியல் நடுவர் செய்யவில்லை இதன்மூலம் கொலைக்கு உடந்தையாக நடுவர் செயல்பட்டுள்ளார். நீதித்துறைக்கு பெருத்த அவமானத்தை ஏற்படுத்தி உள்ளார்.



# பட்டா, சிட்டா, அடங்கல்

**பட்டா: ஒரு நிலம் இன்னார் பெயரில் உள்ளது என்பதை குறிக்கும் வகையில் வருவாய்துறை அளிக்கும் சான்றிதழ்.**

**சிட்டா:** குறிப்பிட்ட நிலத்தின் பரப்பளவு அதன் பயன்பாடு, யாருடைய கட்டுபாட்டில் உள்ளது என்பது தொடர்பான விவரங்கள் அடங்கிய வருவாய்த்துறை ஆவணம்.

**அடங்கல்:** நிலத்தின் பரப்பு, பயன்பாடு, கிராமத்தின் மொத்த நிலத்தில் இது எந்த பகுதயில் உள்ளது என்ற விவரங்கள் அடங்கிய வருவாய்த்துறை ஆவணம்.

**கிராம நத்தம்:** ஒவ்வொரு கிராமத்திலும் குடியிருப்பு பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலம்.

**கிராம தானம்:** கிராமத்தின் பொது பயன்பாட்டுக்காக நிலத்தை ஒதுக்குவது.

**தேவ தானம்:** கோவில் பயன்பாட்டுக்காக குறிப்பிட்ட நிலத்தை தானமாக அளித்தல்.

**இனாம்தார்:** பொது நோக்கத்துக்காக தனது நிலத்தை இலவசமாக அளித்தவரை குறிக்க பயன்படுத்தும் சொல்.

**விஸ்தீரணம்:** நிலத்தின் பரப்பளவு. எல்லைகளை குறிப்பது.

**ஷரத்து:** பிரிவு.

**இலாகா:** துறை.

**கிரயம்:** நிலத்தை ஒருவருக்கு விற்பனை செய்வதை ஆவணபடுத்துதல்.

**வில்லங்க சான்று:** ஒருநிலத்தை ஒருவருக்கு விற்பனை செய்த அதன் உரிமையாளர், அதனை மறைத்துவிட்டு, அதே நிலத்தை வேறு ஒருவருக்கு விற்பனை செய்வது மோசடி. இந்த விவரத்தை அறிந்து கொள்ள உதவும் பதிவுத்துறை ஆவணம்.

**புல எண்:** நில அளவை எண்.

**இறங்குரிமை:** வாரிசுரிமை.

**தாய்பத்திரம்:** ஒரு குறிப்பிட்ட நிலம், இப்போதைய உரிமையாளருக்கு முன்னர் யாரிடம் இருந்தது என்பதை அறிய உதவும் முந்தய பரிவர்த்தன ஆவணங்கள்.

**ஏற்றது ஆற்றுதல்:** குறித்தவகை பொறுப்பை நிறைவற்றுவதற்கு உறுதி அளித்தல்.

**அனுபவ பாத்தியதை:** நிலத்தை பயன்படுதி கொள்ளும் உரிமை.

**சுவாதீனம் ஒப்படைப்பு:** நிலத்தின் மீதான உரிமையை ஒப்படைத்தல்.

**ஜமாபந்தி:** வருவாய் தீர்வாயம்.

**நன்செய் நிலம்:** அதிக பாசன வசதி கொண்டநிலம்.

**புன்செய் நிலம்:** பாசன தேவைக்கு மழையை நம்பியுள்ள நிலம்.



www.propertywala.c

# மரங்களை வெட்டுவதற்கு அரசினுடைய அனுமதி பெற வேண்டுமா...?

**ஆம் கண்டிப்பாக அரசினுடைய அனுமதி பெற வேண்டும். தமிழகத்தில் உள்ள வனப்பகுதிகளில் பெரும்பாலும் வனத்தையொட்டி மக்களின் தேவைக்கென பலவிதமாக பாதிப்புக்குள்ளாகுவதை கருத்தில் கொண்டு, நீர்பிடி பகுதியில் நீர் ஆதாரமாக விளங்கும் மலைகளில் மரங்களை பாதுகாக்கும் வகையில் மலைதள மரங்கள் பாதுகாப்பு சட்டம் 1955ம் ஆண்டு அமலாக்கப்பட்டது.**

இச்சட்டத்தின் உட்பிரிவு 3(1)ஏ படி கல்ராயன், பச்சமலை வனப்பகுதிகளில் மூங்கில், சிறு மற்றும் பெரு மரங்கள் பொது இடம் அல்லது தனியார் நிலத்தில் இருந்தால் வெட்ட மாவட்ட கலெக்டர் தலைமை யிலான அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் அனுமதி பெறப்பட வேண்டும். மழை யின்றி இருப்பதால் மரங்களை பாதுகாப்பது அவசியமாகும். ஒவ்வொரு வனப்பகுதி, மலைகளில் மரங்களை வெட்ட அனுமதிக்க கூடாது என அரசு உத்தரவிட்டுள்ளது.

1.'பட்டா ஆவணத்துடன் உரிமை வழங்கப் பெற்றுள்ள நிலம் தனியார் நிலம் மற்றும் வருவாய் நிலத்தில் வளர்க்கப்படும் சந்தன மரம் & மரங்கள் வெட்டுதலுக்கும், விற்பதற்குமான அனுமதி.

2.'பட்டா நிலத்திலும் தனியார் நிலத்திலும், வருவாய் நிலத்திலும் வளர்க்கப் படும் செம்மரங்கள், கருமரங்கள், 'சில்வர் ஓக்' மரங்கள், இளஞ்சிவப்பு நிற மரங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு சட்டங்கள் / விதிகளின் கீழ்அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களுக்கு வெளியே மற்றும் தேக்கு மரங்களை வெட்டுவதற்கான முன் தகவல் அளித்தல்.

சொத்து அடையாளப்பதிவு / புதுப்பித்தல் மற்றும் செம்மரங்கள் / மரத்துண்டுகள் மரக்கட்டைகள் தவிர, விலக்கு அளிக்கப்படாத மர வகைகைளை ஏற்றிச் செல்வதற்கான இசைவாணை வழங்கி அனுமதித்தல்.

4. சொத்து அடையாளப்பதிவு / புதுப்பித்தல் மற்றும் செம்மரம் செம்மரங்களை / செம்மரக்கட்டைகளை ஏற்றிக்கொண்டு செல்வதற்கான இசைவாணை வழங்கி அனுமதித்தல்.

குறிப்பு : மரங்கள் வெட்டப்படுவதற்குரிய பகுதிகள், தமிழ்நாடு தனியார்காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949ன் படி, (மரம் / கோப்புகள் / அலுவலகங்கள் – தமிழ்நாடு வனப்பாதுகாப்பு) அல்லது தமிழ்நாடு மலைப்பகுதி (மரங்கள் பாதுகாப்பு)சட்டம், 1955ன் படி (மரம் / கோப்புகள் / அலுவலகங்கள் - தமிழ்நாடு வனப்பகுதிகள் சட்டம். தனியார் வனப்பகுதியில் அல்லது மலைப்பகுதியில் அமைந்திருந்தால், விண்ணப்பதாரர் உரிய அனுமதியை / ஒப்புதலைப் பெற தொடர்புடைய மாவட்ட ஆட்சியரை மாவட்டக்குழுத் தலைவரை அணுகவேண்டும்.

மரங்கள் வெட்டப்படவுள்ள பகுதியாளது ஓர் காப்புக்காடாக / காப்பு நிலமாக சரணாலயம் புகலிடம், தேசியப்பூங்கா அல்லது இயற்கை வளப் பாதுகாப்புக்கான ஒதுக்கீடு இவை போன்றவகையாக இருப்பின் மரங்களை வெட்டுவது என்பது வன பாதுகாப்புச் சட்டம் 1980ன் படி, காடுகளைத் திசைதிருப்பும் செயல்முறையின் பகுதியாக அமையும். இப்பகுதிகளில், மரங்கள் வெட்டுவதற்கு தடையில்லாச் சான்று, சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்றம்அமைச்சகத்தின் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் இதனை வலைத்தளம் வழியாக விண்ணப்பித்துப் பெறலாம். வலைதளம்.. https:www.forestclearance.nic.in

அப்படிப்பட்ட நேர்வுகளில், மரங்களை வெட்டுவதற்கு, தமிழ்நாடு அரசு, தனியே, தடையில்லாச் சான்று வழங்குதல் என்ற தேவை எழவில்லை. மேலே கூறப்பட்டுள்ள இனங்கள் i மற்றும் iiல் உள்ளவை தவிர மற்ற இடங்களில் தனியார் ஆவணத்துடன் உரிமை வழங்கப்பட்டுள்ள நிலத்திலும், வருவாய் நிலத்திலும் மரங்களை வெட்டுவதற்கு, மேற்கண்ட சேவைகளுக்கான விண்ணப்பங்கள் இணைய நுழைவாயிலில் அனுமதி பெறலாம்.




# ஆவணங்கள் தொலைந்தால்... எப்படி திரும்பப் பெறுவது?

எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும் சில நேரங்களில் ரேஷன் கார்டு, டிரைவிங் லைசென்ஸ், கிரயப் பத்திரம், இன்ஷூரன்ஸ் பாலிசி என ஏதாவது ஒரு முக்கியமான ஆவணத்தைத் தொலைத்துவிட்டு பலரும் தவிப்பதை நாம் பார்க்கலாம்.

*அப்படி தொலைந்து போனால் அல்லது மழையில் நனைந்து கிழிந்து அழிந்து போனால் அவற்றை திரும்பப் பெறுவது எப்படி என்பதை இங்கே தெரிந்துகொள்ளலாம்.*

## இன்ஷூரன்ஸ் பாலிசி!

*யாரை அணுகுவது..?*

*பாலிசியை விநியோகம் செய்த கிளையை.*

**என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?**

முகவரிச் சான்று, புகைப்பட அடையாளச் சான்றின் நகல்களில் நோட்டரி பப்ளிக் சான்றொப்பம் இடப்பட்டவை மற்றும் பிரீமியம் செலுத்தியதற்கான ஏதாவது ஒரு ரசீது நகல்.

### எவ்வளவு கட்டணம்?

ஆவணங்கள் தயாரிப்புக் கட்டணமாக ரூ.75 கட்ட வேண்டும். இது தவிர, கவரேஜ் தொகையில் 1,000 ரூபாய்க்கு 20 காசு வீதம் கவரேஜ் தொகைக்கு ஏற்ப கட்டணம் செலுத்த வேண்டும்.

**கால வரையறை:** விண்ணப்பம் அளித்த 15 நாட்களுக்குள் நகல் ஆவணம் கிடைக்கக்கூடும்.

**நடைமுறை:** நகல் பாலிசி கோரும் விண்ணப்பக் கடிதம் அளித்தால் அதற்குரிய இரண்டு ஆவணங்கள் தருவார்கள். அதில் ஒரு ஆவணத்தை 80 ரூபாய் பத்திரத்தில் டைப் செய்துகொள்ள வேண்டும். இன்னொரு ஆவணத்தில் பாலிசி தொலைந்து போன விவரங்கள் கேள்வி பதில் வடிவில் கேட்கப்பட்டிருக்கும்; அதை பூர்த்தி செய்து நோட்டரி பப்ளிக் ஒப்புதலோடு, ஆவணங்களை இணைத்து தர வேண்டும்.

### மதிப்பெண் பட்டியல்!

யாரை அணுகுவது..?

பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்ட கல்வி அதிகாரி.

### என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?

மதிப்பெண் பட்டியல் நகல், பள்ளி மாற்றுச் சான்றிதழ், கட்டணம் செலுத்திய ரசீது.

### எவ்வளவு கட்டணம்?

உயர்நிலைப் பொதுத்தேர்வு (10ம் வகுப்பு) ரூ.105.

மேல்நிலை பொதுத்தேர்வு ( 2) பட்டியல் ரூ.505.

கால வரையறை: விண்ணப்பம் செய்த திலிருந்து 60 நாட்கள்.

**நடைமுறை:** காவல் துறையில் புகார் அளித்து 'கண்டுபிடிக்க முடியவில்லை' என சான்றிதழ் வாங்கியபிறகு, முன்பு படித்த பள்ளி/நிறுவனத்தின் மூலம் விண்ணப்பம் வாங்கி அதை பூர்த்தி செய்து தாசில்தாரிடம் கையப்பம் வாங்க வேண்டும்.

அந்த விண்ணப்பத்தோடு ஒரு கடிதம் மற்றும் இணைப்புகள் சேர்த்து மாவட்ட கல்வித்துறை அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

இந்த விவரங்களை அரசிதழில் வெளியிட்டு அதன் அடிப்படையில் அவர் பள்ளித் தேர்வுத்துறை இயக்குநருக்கு அனுப்புவார்.

தனித் தேர்வர்கள் நேரடியாக தேர்வுத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட உயர் கல்விக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களை அணுக வேண்டும்.

### ரேஷன் கார்டு!

### யாரை அணுகுவது..?

கிராமப்புறங்களில் வட்டார உணவுப் பொருள் வழங்கு அலுவலர்; நகர்ப்பகுதிகளில் உணவுப் பொருள் வழங்கு துறை மண்டல உதவி ஆணையர்.

### என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?

காணாமல் போன குடும்ப அட்டையின் நகல் அல்லது ஏதாவது ஒரு அடையாள அட்டை

### எவ்வளவு கட்டணம்?

புதிய ரேஷன் கார்டு வாங்கும்போது ரூ.10 கட்ட வேண்டும்.

**கால வரையறை:** விண்ணப்பம் அளித்த 45 நாட்களுக்குள் கிடைத்துவிடும்.

**நடைமுறை:** சம்பந்தப்பட்ட அலுவலரிடத்தில் காணாமல் போன விவரத்தைக் குறிப்பிட்டு கடிதம் தந்து, அவர்கள் வழங்கும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தர வேண்டும். அவர்களின் விசாரணைக்குப் பிறகு புது குடும்ப அட்டை அனுப்பி வைக்கப்படும்.

### டிரைவிங் லைசென்ஸ்!

### யாரை அணுகுவது?

மாவட்டப் போக்குவரத்து அதிகாரி.

என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?

பழைய லைசென்ஸ் நகல் அல்லது எண்.

### எவ்வளவு கட்டணம்?

கட்டணம் ரூ.315 (இலகுரக மற்றும் கனரக




வாகனம்).

**கால வரையறை:** விண்ணப்பம் செய்தபிறகு அதிகபட்சமாக ஒரு வாரம்.

**நடைமுறை:** காவல் துறையில் புகார் தெரிவித்து, அவர்களிடம் சான்றிதழ் வாங்கியபிறகு மாவட்டப் போக்குவரத்து அதிகாரிக்கு விண்ணப்பம்.

### பான் கார்டு!

### யாரை அணுகுவது?

பான் கார்டு பெற்றுத் தரும் அங்கீகரிக்கப் பட்ட ஏஜென்டுகள் அல்லது வருமான வரித்துறை.

### என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?

பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இரண்டு, அடையாளச் சான்று மற்றும் முகவரிச் சான்று நகல்கள்.

### எவ்வளவு கட்டணம்?

அரசுக்குச் செலுத்த வேண்டிய ரூ.96 ரூபாய்.

**கால வரையறை:** விண்ணப்பித்தப் பிறகு 45 நாட்கள்.

**நடைமுறை:** பான் கார்டு கரெக்ஷன் விண்ணப்பம் வாங்கி அதில் தேவையான விவரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

### பங்குச் சந்தைஆவணம்!

### யாரை அணுகுவது?

சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பதிவாளர்.

### என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?

காவல் துறை சான்றிதழ், பங்கு ஆவணத்தின் நகல் அல்லது ஃபோலியோ எண்.

**எவ்வளவு கட்டணம்?** தனியாக கட்டணம் கட்டத் தேவையில்லை; ஆனால், பங்குகளின் சந்தை மதிப்பிற்கு ஏற்ப முத்திரைத்தாள் கட்டணம் செலுத்த வேண்டும்.

**கால வரையறை:** விண்ணப்பித்த 45 நாட்களிலிருந்து 90 நாட்களுக்குள்.

**நடைமுறை:** முதலில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதம் எழுதவும். இதன் அடிப்படையில் காவல் துறையில் புகார் அளித்து சான்றிதழ் வாங்க வேண்டும்.

பங்குகள் மதிப்பிற்கு ஏற்ப நிறுவனம் குறிப்பிடும் தொகைக்கு முத்திரைத்தாளில் ஒப்புதல் கடிதம் தர வேண்டும்.

சில நிறுவனங்கள் செய்தித்தாள்களில் விளம்பரம் வெளியிட வலியுறுத்தும்.

### கிரயப் பத்திரம்!

### யாரை அணுகுவது..?

பத்திரப்பதிவு துறை துணைப் பதிவாளர்.

### என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?

காவல் துறை கடிதம், பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரம், யாரிடமும் இருந்து ஆட்சேபனை வரவில்லை என்பதற்கான நோட்டரி பப்ளிக் ஒருவரின் உறுதிமொழி, சர்வே எண் விவரங்கள்.

**எவ்வளவு கட்டணம்?** ஆவணக் கட்டணம் 100 ரூபாய். இது தவிர, கூடுதலாக ஒவ்வொரு பக்கத்திற்கும் 20 ரூபாய்.

**கால வரையறை:** ஒரு சில நாட்களில் கிடைக்கக்கூடும்.

**நடைமுறை:** கிரயப் பத்திரம் தொலைந்த பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் புகார் அளித்து அவர்களிடமிருந்து சான்றிதழ் வாங்க வேண்டும்.

தொலைந்த விவரம் குறிப்பிட்டு பத்திரிகையில் விளம்பரம் செய்ய வேண்டும். இதற்குபிறகு சார்பு பதிவாளர் அலுவலம் செல்ல வேண்டும்.

*டெபிட் கார்டு!*

**யாரை அணுகுவது..?**

*சம்பந்தப்பட்ட வங்கியின் கிளை மேலாளர்.*

**என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?**

*கணக்குத் தொடர்பான விவரங்கள்.*

**எவ்வளவு கட்டணம்?**

*ரூ.100.*

**கால வரையறை:** *வங்கியைப் பொறுத்து ஓரிரு நாட்கள் அல்லது அதிகபட்சம் 15 நாட்கள்.*

**நடைமுறை:** *டெபிட் கார்டு தொலைந்த வுடன் அந்த வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்திற்கு தகவல் தெரிவித்து, அதன் மூலம் மோசடியான பரிவர்த்தனைகள் நடக்காதவாறு தடுக்க வேண்டும்.*

*அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட கிளைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி புது டெபிட் கார்டு வழங்குமாறு கோர வேண்டும்.*

**பட்டா**

**யாரை அணுகுவது..?**

*வட்டாட்சியர்.*

**என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்.?**

*நகல் பட்டா கோரும் விண்ணப்பம்.*

**எவ்வளவு கட்டணம்?**

*ரூ.20.*

**கால வரையறை:** *ஒரு சில நாட்களில் கிடைக்கக்கூடும்.*

**நடைமுறை:** *முதலில் தாசில்தாரிடம் மனு தர வேண்டும். அவர் பரிந்துரையின் பேரில் கிராம நிர்வாக அதிகாரி (வி.ஏ.ஓ.), வருவாய் ஆய்வாளரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.*

*இதன் அடிப்படையில் தாசில்தார் அலுவல கத்தில் விண்ணபபித்தால் நகல் பட்டா கிடைத்துவிடும்.*

**பாஸ்போர்ட்!**

**யாரை அணுகுவது..?**

*மண்டல பாஸ்போர்ட் அலுவலகங்கள்.*

**என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?**

*காவல் துறை சான்றிதழ், பழைய பாஸ் போர்ட் நகல், 20 ரூபாய் முத்திரைத்தாளில் விண்ணப்பம்.*

**எவ்வளவு கட்டணம்?**

*ரூ.4,000.*

**கால வரையறை**: *இந்தியாவில் தொலைத் திருந்தால் 35லிருந்து 40 நாட்கள்; வெளிநாட்டில் தொலைத்திருந்தால் அதிக காலம் எடுக்கும்.*

**நடைமுறை:** *பாஸ்போர்ட் தொலைத்த பகுதியில் உள்ள காவல் துறையில் புகார் அளித்து கண்டுபிடிக்கப்படவில்லை என்கிற சான்றிதழ் வாங்க வேண்டும்.*

*20 ரூபாய் முத்திரைத்தாளில் தொலைந்த விவரங்களை பதிவு செய்துகொள்ள வேண்டும்.*

*இவற்றில் நோட்டரி பப்ளிக் ஒருவரின் கையெழுத்து பெற்று மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.*

*அதன் அடிப்படையில் அவர்கள் விசாரணை மேற்கொண்ட பிறகு நகல் பாஸ்போர்ட் அனுப்பி வைத்துவிடுவார்கள்.*

**கிரெடிட்_கார்டு!**

**யாரை அணுகுவது?**

*நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை மையம்.*

*என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும்?*

*தொலைந்துபோன கிரெடிட் கார்டு தொடர்பான விவரங்கள்.*

**எவ்வளவு கட்டணம்?**

*ரூ.100 (நிறுவனத்துக்கேற்ப வேறுபடும்).*

**கால வரையறை:** *15 வேலை நாட்கள்.*

**நடைமுறை :** *கிரெடிட் கார்டு தொலைந்த தும் உடனடியாக வாடிக்கையாளர் சேவை மையத்துக்கு தகவல் அளித்து பரிவர்த்தனைகளை நிறுத்த வேண்டும்.*

*தொலைந்த கார்டுக்கு மாற்றாக வேறு கார்டு அளிக்கக் கோரினால் பதினைந்து வேலை நாட்களுக்குள் உங்களுக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள். அடையாளச் சான்று காண்பித்து வாங்க வேண்டும்.*


டிசம்பர் 6
அம்பேத்கர்
நினைவுநாள்
அம்பேத்கார்
நினைவைப்
போற்றுவோம்!

# டாக்டர் பி.ஆர் அம்பேத்காரை மட்டும் ஏன் சிறைச்சாலையில் ஆங்கிலேயர் அடைக்கவில்லை தெரியுமா..!

இந்தியாவில் நேரு, காந்தி மற்றும் அனைத்து தலைவர்களையும் ஆங்கிலேயர் சிறையில் அடைத்தார்கள்!

பிரிட்டிஷ் நாட்டில் அவர் படித்த யுனிவர் சிட்டியில் ஒரு சங்கம் உண்டு.!!

LAW படித்தவர்களுக்கு மட்டும் அந்த சங்கம், officer club அந்த சங்கத்தில் உலக அளவில் உள்ள அறிவாளிகள்மட்டுமே உறுப்பினர் ஆக

இருக்க முடியும் ஆனால் அவ்வளவு எளிதாக அந்த சங்கத்தில் உறுப்பினராக

முடியாது. ஏன் என்றால் உலகில் உள்ள அனைத்து நாடுகளின் அரசியல்அமைப்பு சட்டத்தை முழுமையாக தெரிந்தவர்கள் மட்டுமே அந்த சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க முடியும்.!

officerclub அந்தச் சங்கத்தில் இந்தியாவில் இருந்து உறுப்பினர் ஆன ஒரே நபர் அம்பேத்கர் மட்டுமே.!!

டாக்டர் அம்பேத்காரை கைது செய்ய வேண்டும் என்றால் அந்த சங்கத்தில் முதலில் அனுமதி பெற்ற பிறகே கைது செய்ய முடியும்.!

ஆனால் அந்த சங்கத்தில் உள்ளவர்கள் தான் நாட்டில் மிகச்சிறந்த தெளிவான ஆற்றல் பொருந்த்திய அறிவாளியாக இருக்க முடியும்.!!

அப்படி இருக்கும் போது அவர்கள் ஈடுபடும் போராட்டம் எப்படி தவறாகச் இருக்க முடியும்.!

இது தெரியாத ஒரு ஆங்கிலேய அதிகாரி ஒருவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் நடத்திய கோவில் நுழைவு போராட்டத்தை பல ஆயிரம் பேரைத் திரட்டி ஈடுபடும் போது டாக்டர் அம்பேத்காரை கைது செய்வேன் என்று பிரிட்டிஷ் அதிகாரி மிரட்டி உள்ளான்.!!

அந்த அதிகாரி உடனே டாக்டர் அம்பேத்கரை கைது செய்ய முற்படும்போது டாக்டர் அம்பேத்கர் என்னை கைது செய்ய பிடிவாரண்டு இருக்கா என்று கேட்டு உள்ளார்..

உடனே அவனும் பிடி வாரண்டு தயார் செய்து கொடுத்துள்ளான்.! அந்த பிடி வாரண்டை டாக்டர்அம்பேத்கர் டைப் பண்ணி அதை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தார் அதை பார்த்த பிரிட்டிஷ் அரசு அந்த அதிகாரியை உடனே சஸ்பெண்ட் செய்தது ஏன் என்றால் டாக்டர் அம்பேத்காரை கைது செய்யவேண்டும் என்றால் பிரிட்டிஷ் நாட்டில் உள்ள உலக அறிவாளிகளுக்கான officer club சங்கத்தில் முதலில் அனுமதி பெற்ற பிறகே கைது செய்ய முடியும்.!!

ஆனால் டாக்டர் அம்பேத்காரை அவ் வளவு எளிமையாக கைது செய்ய முடியாது அந்த அதிகாரி இது கூடத் தெரியாமல் இருந்திருக்கிறானே என்பதால் பிரிட்டிஷ் அரசு அவனை உடனே சஸ்பெண்ட் பன்னியது.!

உடனே டாக்டர் அம்பேத்கர் பிரிட்டிஷ் அரசிடம் ஒரு கோரிக்கை வைக்கிறார் அந்த போலிஸ் அதிகாரியை சஸ் பெண்ட் பன்னுனா மட்டும் போதுமா என்று.?

அதற்கு உடனே பிரிட்டிஷ் அரசு அனைத்து பிரிட்டிஷ் அதிகாரிகளையும்

வெளியேற்றப்பட்டு அந்த;அதிகாரியை பிரிட்டிஷ் நாட்டிற்கே வரவழைத்துக் கொண்டது.!!

இந்தியாவில் இருந்து இதுவரை அந்த சங்கத்தில் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்காரை தவிர வேறுயாரும் இது வரை உறுப்பினர் ஆக வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.!



**K.தாந்தோணி**
மாநில இணைச் செயலாளர்- தமிழ்நாடு
மற்றும் துணை ஆசிரியர், தமிழ்நாடு நுகர்விழி

# லஞ்ச ஒழிப்புப் புகார் அளிப்பது எப்படி?

**ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் செயல்படும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு போலீஸார், (லஞ்ச ஒழிப்புத்துறை), அந்தந்த மாவட்டத்தின் எஸ்.பி. கட்டுப்பாட்டிலோ, அல்லது கலெக்டரின் கட்டுப்பாட்டிலோ கிடையாது.**



லஞ்சஒழிப்பு துறை அமைப்பானது,முற்றிலும், சென்னையில் தலைமைச்செயலகத்தில் இயங்கி வரும் CHIEF SECRETARY அந்தஸ்த்தில் உள்ள VIGILANCE COMMISSIONER- அவர்களின் கட்டுப்பாட்டிலும், சென்னை ஆலந்தூரில் உள்ள DGP அல்லது ADDL.DGP அந்தஸ்த்தில் உள்ள,ஒரு மூத்த IPS அதிகாரியின் தலைமையில் இயங்கிவரும், DVAC என்றழைக்கப்படும் “Directorate of Vigilance and Anti-Corruption” என்ற இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டிலும் மட்டும்தான் செயல்படுகின்றனர். இன்னும் சொல்லப்போனால், மேற்சொன்ன மாவட்ட அதிகாரிகளின் செயல் பாடுகளையே கண்காணித்து, தவறு இறுப்பின் நடவடிக்கை

எடுக்க கடமைப்பட்டவர்கள்.

லஞ்ச ஒழிப்புச்சட்டம்

லஞ்ச ஒழிப்புச்சட்டம்என்று அழைக்கப்படும் PREVENTION OF CORRUPTION ACT 1988 பிரிவு2 பிரகாரம், அரசுப்பணியில் உள்ள அரசு ஊழியர்கள் மட்டுமின்றி, மக்களால் பொதுப்பணிக்கென தேர்ந்தெடுக்கப்படும், பஞ்சாயத்துப் போர்டு தலைவர், வார்டு உறுப்பினர்கள், நகரம், மாவட்டம் மற்றும் முனிசிபல் கவுன்சிலர்கள், சேர்மேன் மற்றும் அரசு நிர்வாகத்தில் உள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் PUBLIC SERVANTS என்ற வரையரறைக்குட்பட்டதால், கடைநிலையில் உள்ள ஒரு வி.எ.ஓ.வை எப்படி நூறுக்கும், இருநூறுக்கும், அந்தச்சட்டத்தின் கீழ், எளிதில் பொறி வைத்துப் பிடிக்கிறார்களோ, அதேபோல் பொறிவைப்பு நடவடிக்கைக்கு உட்பட்டவர்கள்தான்.

சமீபத்தில், திருச்சி, நாகப்பட்டினம் மற்றும் பல மாவட்டங்களில், பஞ்சாயத்துபோர்டு தலைவர்களைக்கூட லஞ்சஒழிப்பு போலீஸார் பொறிவைத்து பிடித்துள்ளார்கள்.

லஞ்சத்தில் நான்கு வகைகள்

அவை பின்வருமாறு:

(a) Demanding bribe from any individual, either to do any official act, or to do any service or disservice to any one

(b) Mega Level-Organised Corruption, by colluding with each other, viz. the whole team of officials right from bottom to top, the contractors and the middle men, would be colluded with each other. In this type of corruption, the Public/Govt money alone will be siphoned

(c) Minor Level-Organised Corruption, wherein the enforcing officials in the field and the organised criminals in the same area, would collude with each other for sharing the ill-gotten money.

(Example- The Corrupt Officials would collude with the Prohibition Offenders, Gamblers, Brothel-house-runners, Smugglers and other anti social elements in their jurisdictions for ill-gotten money)

(d) Petty corruption ( Mostly practiced by Corruptive Traffic Police men with the road side vendors and the Last grade servants, almost in all the Government offices, wherein only a meager amount of Rupees, viz. Rs-100/ to 500/ are involved)

இந்த நான்கு வகையில்,

1வது வகையான லஞ்சத்தில் ஈடுபடுபவர்கள் தான் அடிக்கடி “பொறி வைப்பு“ நடவடிக்கையில் சிக்குவார்கள்.ஏனெனில், இதில் பாதிக்கப்பட்ட நபர் Motivate- ஆகி புகார் அளிக்க தயாராக இருப்பார்.

2வது வகையான லஞ்சம் வொயிட்காலர் (white color) லஞ்சம் எனப்படும். இந்த வகை லஞ்சத்தில் இழப்புக்குண் டாவது அரசாங்கம்தான். இழப்புக்குண்டாகும் அரசுப்பணத்தின் அளவு கற்பனைக்கு எட்டாததாக இருக்கும். எப்போதாவது சில நேரங்களில் அத்திபூத்தார் போல சிலநேர்மையான அதிகாரிகளின்கண்களில் படும்போது மட்டும் திடீரென வெடித்து பரபரப்பாகும். இந்த வகையான லஞ்சத்தால் எற்படும் பாதிப்பு கேன்ஸர் போன்றது.



ஏனெனில், இதன் பாதிப்பு, கண்களுக்கு உடனடியாகத்தெரியாது,

ஆனால், நாளடவில் ஏற்படும் பாதிப்பு மரணத்திற்கு ஒப்பானது.

3வது வகையான லஞ்சத்தில்தான், சமூகம் சீரழிவது கண்ணுக்கு எதிரேயே தெரியும். கள்ளச்சாரயம், சூதாட்டங்கள், ப்ராத்தல் ஹவுஸ்கள், கலப்படங்கள், கட்டப்பஞ் சாயத்துக்கள், இன்னும் பல.

4வது வகை லஞ்சம் பொதுமக்களுக்கு அன்றாடத் தொல்லைகள் தரும் வகையைச் சேர்ந்தது.100ரூபாய்க்கும், 200 ரூபாய்க்கும் லஞ்சத்தில் ஈடுபடும் ஒரு கடை நிலை ஊழியரை தண்டிப்பது பரிதாபத்துக்கு உரியதாகத்தெரிந்தாலும், பொது இடங்களில் அச்செயல் மிகுந்த தொல்லைக்குரியதாகவே தெரியும்.4வது வகையில் சொல்லப்பட்டுள்ள Petty-Corruption என்பது பிச்சைக்காரர்கள் அதிகார தொனியில், பிச்சை எடுப்பது போலத்தான்.

அதே போல, லஞ்ச ஒழிப்பு நடவடிக்கை யிலும்,மூன்று வகைகள் உண்டு.

1) Trap Case. ( பொறி வைத்துப்பிடித்தல்)

2) Regular case. (FIR will be registered later based on the outcome of (a)Detailed enquiry (b) Preliminary enquiry(c) Surprise Check (d) even sometimes from Vigilance reports.

3)Regular case for D.P Assets ( FIR will be registered by DVAC for the possession of Disproportionate Assets by the public servants. FIR will be registered ,only after the Vigilance Commision and the DVAC satisfied from the preliminary enquiry or Detailed enquiry that there is a case of prima facie of D.P.Assets against the corruptive public servants. )

எப்படி புகார் அளிப்பது:

இதில், லஞ்சம்கொடுத்தால்தான் வாயையே தொறப்பேன் என்று செயல் படும் சில Corruptive Officials மீது பொறிவைப்பு நடவடிக்கை வேண்டுவோர், அந்தந்த மாவட்ட தலைநகரில் ஒரு டி.எஸ்.பி தலைமையில் செயல் படும் லஞ்ச ஒழிப்பு பிரிவிற்கு நேரில் சென்று விபரம் கூறினால் போதும். பொறி வைத்து முடித்து, அந்த லஞ்ச அதிகாரிகளை கைதுசெய்யும் வரை அவர்களே உடனிருந்து செயல் படுவார்கள். பொதுமக்கள் தாங்கள் அவ்வாறு புகார் அளித்தால், 'நம் அரசு வேலையை முடித்துக் கொடுக்க மாட்டார்களே என்று கவலைப்பட வேண்டாம். பொறிவைப்பு நடவடிக்கை முடிந்ததும், அந்த வேலையை செய்து கொடுக்க, லஞ்ச ஒழிப்பு போலீஸாரே உரிய உயர் அதிகாரிகளை தொடர்பு கொண்டு,ஆவன செய்து கொடுக்க வேண்டும் என்று ஏற்கனவே அரசு உத்தரவிட்டுள்ளது.

2, மற்றும் 3வது வகையான லஞ்சம் தொடர்பான குற்றங்களுக்கு, பெரும்பாலும் பொறிவைப்பு நடவடிக்கைகான புகார்கள் வராது. காரணம், இது ஒரு Collusive Corruption. இவற்றை கீலீவீடீமீறீமீஙிறீஷீஷிமீகூஷீ கள்தான் வெளிக்கொண்டுவரவேண்டும்.

இந்த வகையான Collusive Natured Corruption- தொடர்பான குற்றங்களுக்கு எதிராக, FIR போடுவதற்கு அடிப்படையாகத்தேவைப்படுகின்ற Detailled Enquiry/ Preliminary Enquiry/ Surprise Check செய்வதற்கு தேவையான தகவல்கள், லஞ்சப்பணம் transaction நடைபேறும் இடம், Illegal Assets பற்றிய செய்திகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்த தரமற்றஅரசுப்பணிகள் (Sub-standard Works) பற்றிய தகவல்கள், மாமூல் நடைபெறும் விதம், அவை நடைபெறும் இடம் மற்றும் அதில் Colludeஆகியுள்ள Corrupt Officials மற்றும் வாங்கிக் கொடுக்கும் Middle men மற்றும் சமூகவிரோதக்குற்றங்கள் செய்யும் Organised Offenders பற்றிய விபரங்களை, அனுப்புபவர் பெயர் முகவரி எதுவும் குறிப்பிடாமல், புகாராகவோ அல்லது இமெயில் மூலமகவோ,சென்னையில் இதனடியில் கூறிஉள்ள அதிகாரிகளுக்கு அனுப்பினால் நிச்சயம் அது உரிய நடவடிக்கைகு வரும்.

ஆனால், இந்த வகையான வழக்குகளில், வழக்கின் தன்மையை பொறுத்துத்தான் கைது போன்ற நடவடிக்கைகள் செய்வார்கள். இதில் பொறிவைப்பு நடவடிக்கை போல உடனடி கைது இல்லாவிட்டாலும், சம்பந்தப்பட்ட லஞ்

சப்பேர்வழி காலப்போக்கில் சட்னியாகிவிடுவார்.

விஜிலன்ஸ் கமிஷனர் மற்றும் DVAC முகவரிகள் பொதுமக்கள் பயன் பாட்டுக்காக கொடுக்கப்பட்டுள்ளது.

1) Vigilance Commissioner

Personnel and Administrative Reforms Department Secretariat, Chennai 600 009 PBX No. 044-25665566 Email: parsec@tn.gov.in

(2)The Director, Vigilance and Anti-Corruption, 293,MKN Road, Collectors Nagar, Alandur,Chennai,Tamil Nadu-600016.

Chennai – 600 028.

Phone-044-22321090/22321085/22310989/

22342142, E-mail: dvac@nic.in

மத்திய அரசுப்பணியில் உள்ளவர்கள் மீது லஞ்சப்புகார்களை அளிக்கும்பட்சத்தில், மாநில அரசுகட்டுப்பட்டில் உள்ள லஞ்ச ஒழிப்பு போலீஸார் நடவடிக்கை எடுக்க முன்வர மாட்டார்கள். அப்புகார்களை கீழே அளிக்கப்பட்டுள்ள CBI-Anti-Corruption பிரிவிற்கு தொலைபேசி மூலம் தகவல் அளித்தாலே போதும். அவர்களேஉங்கள் இடத்திற்கு, உங்களைத்தேடி வந்து புகாரைப் பெற்று சம்பந்தப்பட்ட Corrupt Officerமீது பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

CHENNAI ZONE

Joint Director and Head of Zone,

III Floor, E.V.K., Sampath Building, College Road, Chennai 600006.


044-28232756 (Direct),

044-28272358(General),

044-28232755 (FAX) 09444446240

State of Tamil Nadu, Kerala & Pondicherry.

இதையெல்லாம் நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதால் தான் இலஞ்ச லாவண்யம் தலைவிரித்து ஆடுகிறது. உரிய முறையில் உரிய இடத்தில் தொடர்பு கொண்டு இலஞ்சம் இல்லாத தேசம் அமைப்போம்...!



தகவல்: **J.செல்வம்**
மாநில அமைப்பாளர் மற்றும் செய்தி நிருபர்,
தமிழ்நாடு நுகர்விழி
82200 82727



# சிகிச்சைக்கு சேர்ந்திருப்பது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு தகவல் தருவது எப்படி?

மருத்துவமனை தகவல் என்பது Hospital Intimation காயம்பட்ட /பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந் திருப்பது சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு மருத்துவமனையிலிருந்து நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அல்லது புறங்காவல் நிலைய வான்தந்தி மூலமோ VHF&தபால் மூலமோ கொடுக்கப்படும் தகவல் ஆகும்.

மருத்துவமனை தகவல் படிவத்தில் நோயாளியின்

1.பெயர், பாலினம், வயது

2.முகவரி

3.யாரால் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டார் மற்றும் தேதி, நேரம்

4.காயம் மற்றும் விபத்து நடந்த இடம்

5.காயத்தின் தன்மை

6.காயத்திற்கான காரணம் /எவ்வாறு ஏற்பட்டது

7.சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட வார்டு

8. மரண வாக்குமூலம் தேவையா /இல்லையா

மேலே உள்ளதில் வரிசை எண் 7 ல் காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டுள்ளாரா அல்லது வேறு மருத்துவமனைக்கு அனுப்பப்படுகிறாரா அல்லது இறந்து போய்விட்டாரா மற்றும் சிகிச்சையிலிருந்து தலைமறைவாகி Absconding ஆகி விட்டாரா என்ற விபரங்கள் இருக்கும்.

மரணவாக்குமூலம் பெற வேண்டியிருப்பின் நீதிமன்ற நடுவர் அவர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்படும்.

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 62 ன்படி மருத்துவமனை தகவல் சாட்சியமாக ஏற்றுக்






கொள்ளப்படும்.

மருத்துவமனை தகவல் பெற்றவுடன் காவல் அலுவலர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

மேற்படி தகவல் பெற்ற தேதி மற்றும் நேரம் குறிப்பிட்டு மருத்துவமனை தகவலில் கையொப்பம் செய்ய வேண்டும். அதில் பெயர், பதவி, எண் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

மேற்படி தகவல் பெற்ற விபரத்தை பொதுநாட்குறிப்பில் உடனே பதிவு செய்ய வேண்டும்.

உடனடியாக காவல் நிலைய பொறுப்பில் உள்ள காவல் அலுவலர் மருத்துவமனைக்கு சென்று விபத்து பதிவேடு Accident Register நகல் பெற்று அதில் நோயாளி கூறியுள்ள விபரங்களை படித்து பார்த்து சம்மந்தப்பட்ட நோயாளியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் படித்து காட்டி கையொப்பம் பெற வேண்டும். அதன் கீழ் பதிவு செய்யப்பட்ட இடம், தேதி, நேரம் குறிப்பிட்டு பதிவு செய்த அதிகாரி கையொப்பம் செய்ய வேண்டும்.

ஒருவேளை நோயாளி சுயநினைவு இல்லாமல் இருந்தால் அவரை சிகிச்சைக்காக கொண்டு வந்து சேர்த்த அல்லது உடனிருக்கும் நபரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும். மருத்துவரையும் விசாரித்து வாக்குமூலம் பெற்று நோயாளியின் தற்போதைய நிலை குறித்து தெளிவாக எழுதி பெற வேண்டும்.

மாறாக நோயாளி சுயநினைவின்றி இருக்கும் போது அவரை சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தவர்கள் யாரும் இல்லாத நிலையிலும் புற நோயாளியாக சென்றிருந்தாலும் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து, சம்பவ இடம் சென்று விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல் நிலையம் வந்தபின் வாக்குமூலத்தில் கூறியுள்ள புகார் கைது செய்வதற்குரிய குற்றமாக இருந்தால் மட்டுமே திமிஸி பதிவு செய்ய வேண்டும்.

புகார் வாக்குமூலம் பதிவு செய்யும் போதும், எழுத்துமூலமான புகார் பெறப்படும்போதும் புகார்தாரர் சம்பவம் குறித்து ஆஜர்படுத்தும் சொத்துக்களை மகஜரில் /படிவம் 95 ல் கைப்பற்ற வேண்டும். இந்த தகவலை புகாரில் குறிப்பிட வேண்டும்.

இறந்த பிறகு மருத்துவமனைக்கு கொண்டு வரப்படும் பிரேதம் தொடர்புடைய வழக்குகளில் கூடுமானவரை இறந்தவரின் உறவினர்களிடம் புகார் பெற வேண்டும்.

திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள் இறந்துவிடும் பெண்கள் தொடர்பான வழக்குகளில் முடிந்தவரை இறந்துபோன பெண்ணின் பெற்றோரிடம் புகார் வாக்குமூலம் பெற வேண்டும்.

மருத்துவமனை தகவல் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை திமிஸி உடன் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு உடனடியாக அனுப்ப வேண்டும். கைது செய்யக்கூடாத குற்றமாக இருந்தால் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 155 ன்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மருத்துவமனை தகவல் காவல் நிலையத்திற்கு பெறும் முன்னரே அந்த சம்பவம் குறித்து ஏற்கெனவே வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தால், அதன்பிறகு பெற்ற அந்த சம்பவ தகவலின் தேதி, நேரம் குறிப்பிட்டு ஏற்கனவே வழக்கு பதிவு செய்த விபரங்களை எழுதி அந்த தகவலை கட்டாயம் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

### போலிகளுக்கு கிடுக்கிப்பிடி போடும்

# புதிய நுகர்வோர் ஆணையம்

### குற்றம் நிரூபிக்கப்பட்டால் அபராதம்



நுகர்வோர்களின் உரிமைகளை பாதுகாக்க ஒரு புதிய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப் பட உள்ளது. சமீபத்தில் நிறை வேற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ஒரு மத்திய ஆணையத்தை ஏற்படுத்த வகை செய்கிறது. இந்த ஆணையத்திற்கு, தரக்குறைவான பண்டங்களை தயாரிக்கும் நிறுவனங்கள், விற்பனையாளர்கள் மற்றும் அவற்றை விளம்பரப்படுத்துபவர்களுக்கு தண்டனை அளிக்கும் அதிகாரம் அளிக்கப் படுகிறது.

புதிதாக அமைக்கப்பட உள்ள மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நுகர்வோர்

களுக்கு அதிக பாதுகாப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.நியாயமற்றவழிமுறைகள் மற்றும் பொய்யான விளம்பரங்களை செய்யும் உற்பத்தியாளர்கள் மற்றும் முகவர்களை தடுக்க வகை செய்கிறது. இதுபோன்ற விளம்பரங்களில் நடிக்கும் பிரபலங்களும் இனி இந்த சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட முடியும். நுகர்வோர் பாதுகாப்பு மசோதா, 2019 மாநிலங்களவையில் ஆகஸ்டு 6ந்தேதி நிறைவேற்றப்பட்டு, ஆகஸ்டு 9ந்தேதி குடியரசு தலைவரின் ஒப்புதலை பெற்று, சட்டமாக மாறியது. “ஒரு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் (நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 2019ன் கீழ் அமைக்கப்படும் ஒழுங்குமுறை ஆணையம்) அமைக்கப்படுவது புரட்சிகரமான விஷயமாகும். அதிகாரம் கொண்ட இந்த ஆணையத்தின் மூலம் நுகர்வோர்களுக்கு தகுந்த இழப்பீடுகளை பெற்றுத்தர முடியும்“ என்று நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது வினியோகத்துறைகளுக்கான மந்திரி ராம்விலாஸ் பஸ்வான் ஆகஸ்டு 13 அன்று நடைபெற்ற ஒரு ஊடக சந்திப்பில் கூறினார். 130 கோடி இந்தியர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்த பிரதமர் மோடி அளித்த வாக்குறுதி யின் ஒரு அம்சமாக இதை கருதலாம் என்றார்.

கடந்த முப்பது வருடங்களில் இந்திய சந்தை மிகப்பெரிய மாற்றத்தை அடைந்துள்ளது. அளிக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளில், பல்கிப்பெருகியுள்ள விற்பனை வழிமுறைகளில், அதிகரித்து வரும் நுகர்வோர்கள் இவற்றை வாங்க பல விதமான முறைகளில் பெரும் மாற்றங்கள் நடந்துள்ளன. ஆனால் இவற்றை கட்டுப்படுத்த 1986ல் இயற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு சட்டமே பயன்படுத்தப்பட்டு வந்தது.

2019 சட்டம் நுகர்வோர்கள் உரிமைகளை பாதுகாக்க உறுதியளிக்கிறது. பொருட்கள் மற்றும் சேவைகளின் அளிப்பில் ஏற்படும் குறை பாடுகள் பற்றிய புகார்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரிக்க ஒரு அமைப்பை ஏற்படுத்தி, இழப்பீடுகளை பெற வகை செய்கிறது. ஒரு ஒழுங்குமுறை ஆணையத்தை உருவாக்கி, நியாயமற்ற ஒப்பந்தங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அளிக்கப்படும். பொய்யான விளம்பரங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், அவற்றின் மீது அதிக அளவில் அபராதம் விதிக்கவும், அவற்றில் நடிக்கும் பிரபலங்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. ஆன்லைன் வணிகமும் இதன் கீழ் கொண்டு வரப்படும்.



வாங்கப்பட்ட ஒரு பொருள் மீதான புகார் நிரூபிக்கப்பட்டால், அந்நிறுவனம் தயாரித்த (இதே போன்ற) பொருட்கள் அனைத்திற்கும் பொறுப்பேற்க செய்ய வகை செய்யப்படுகிறது.

மாவட்ட நுகர்வோர் ஆணையம் அல்லது மாநில நுகர்வோர் ஆணையத்திடம், வீட்டில் இருந்தே ஆன்லைன் மூலம் புகார் அளிக்க முடியும். இதுவரை பொருள் விற்பனை செய்யப்பட்ட இடத்தில் அல்லது அந்நிறுவனத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் மட்டுமே புகார் அளிக்க அனுமதிக்கப்பட்டது. ஆன்லைன் மூலம் புகார்கள் அளிக்கவும், அதற்கான கட்டணத்தை டிஜிட்டல் முறைகளில் செலுத்தவும் தேவையான விதிமுறைகளை நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சரகம் இறுதி செய்து வருகிறது.

இதுவரை பெரும்பாலான நுகர்வோர்கள் இந்த சட்டத்தை பற்றி தெரியாமல் இருந்தனர். ஒரு மோசமான பொருள் அல்லது சேவை பற்றிய அனுபவங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்தனர். நிறுவனங்கள் மீது வழக்கு தொடர முயன்றவர்கள், நீதிமன்றங்களில் புகார்களை நிரூபிக்க பல வருடங்கள் ஆகியதால், சோர்வடைந்தனர்.

நுகர்வோர்கள் தொடர்ந்த வழக்குகள் முடித்து வைக்கப்படும் விகிதம் அதிகமாக (சுமார் 90 சதவீதம்) இருந்தாலும், இவற்றை தீர்க்க, சராசரியாக 12 மாதங்கள் ஆகிறதாக பி.ஆர்.எஸ். சட்டமன்ற ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.

## நுகர்வோர் யார்?

ஒரு பொருளை வாங்குபவரும், ஒரு சேவையை பெற கட்டணம் செலுத்தியவரும் இந்த புதிய சட்டத்தின் மூலம் புகார் அளிக்க முடியும். ஆனால் மறு விற்பனைக்காக பொருட்கள் அல்லது சேவைகளை வாங்குபவர்கள், வணிகத் திற்காக வாங்குபவர்கள் இந்த சட்டத்தை பயன்படுத்த முடியாது. மாறி வரும் சூழல்களை கருத்தில் கொண்டு, ஆன்லைன் மற்றும் ஆப் லைன் விற்பனைகள், தொலைபேசி மூலம் விற்பனை, பல தள சந்தைபடுத்தும் முறைகள், நேரடி விற்பனை ஆகியவை இந்த புதிய சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகிறது.

இந்த சட்டத்தின் கீழ், புகார் அளிப்பவர் என்பவர், ஒரு நுகர்வோர் அல்லது சட்டப் படி பதிவு செய்யப்பட்ட ஒரு நுகர்வோர் சங்கம், மத்திய அரசு, மாநில அரசுகள், மத்திய ஆணையம், ஒரு வழக்கில் பல நுகர்வோர்கள் சம்பந்தப்பட்டிருந்தால், அவர்கள் அனைவரும் புகார்தாரர்கள் என்று வகைப்படுத்தப்படுவார்கள். ஒரு புகார்தாரர் இறந்துவிட்டால், அவரின் வாரிசுகளும், 18 வயதிற்கு கீழ் உள்ள நுகர்வோருக்கு அவரின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் புகார்தாரராக கருதப்படுவார்கள்.

## பொருட்களுக்கு யார் பொறுப்பு?

குறையுள்ள பொருள் அல்லது சேவையை அளித்து, அதனால் நுகர்வோருக்கு பாதிப்பு அல்லது தீங்கு ஏற்பட்டால், அதற்கு அந்த பொருள் அல்லது சேவையை அளித்த நிறுவனமே பொறுப்பு என்று நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 2019 வரையறை செய்கிறது. இழப்பீடு பெற, நுகர்வோர் இந்த சட்டத்தில் சொல்லப்பட்ட விதிமுறைகளின் படி, பொருள் அல்லது சேவையில் உள்ள குறைபாட்டை நிரூபிக்க வேண்டும். ஒரு பொருள் அல்லது சேவையில் இருந்த குறைபாட்டினால் பாதிப்பு அடையும் நுகர்வோர், அந்த நிறுவனத்திடம் இதன் அடிப்படையில் இழப்பீடு கேட்டு வழக்கு பதிவு செய்ய முடியும்.

## ஒழுங்குமுறை ஆணையம்

நுகர்வோர்களின் நலன்களை முழுமையாக பாதுகாக்கவும், விரைவாக நீதி வழங்கவும், மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தில், செயல் இயக்குனர் தலைமையிலான ஒரு புலனாய்வு பிரிவு அமைக்கப்படும். இந்த பிரிவு சட்ட மீறல்கள் சம்பந்தப்பட்ட புகார்களை விசாரணை செய்யும்.

## பொய்யான தகவல்களை அளிக்கும் விளம்பரங்கள்

பொய்யான தகவல்களை அளிக்கும் விளம்பரத்தை வெளியிடும் நிறுவனத்திற்கும், அதில் நடிப்பவர்களுக்கும் ரூ.10 லட்சம் வரையிலான அபராதம் மற்றும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறை தண்டனை விதிக்கும் அதிகாரத்தை மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்திற்கு, இந்த புதிய நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 2019 அளிக்கிறது. இரண்டாவது முறையாக இதே தவறை

செய்பவர்களுக்கு ரூ.50 லட்சம் வரையிலான அபராதமும், ஐந்து ஆண்டுகள் வரையிலான சிறை தண்டனையும் விதிக்கப்படும். மேலும் இது போன்ற விளம்பரங்களில் நடிக்கும் நடிகர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உள்பட அனைவரையும், ஓராண்டு வரை அந்த நிறுவனத்தின் விளம்பரங்களில் நடிக்க தடை விதிக்க



முடியும். அடுத்தடுத்து விதி மீறல்களின் போது இந்த தடை யின் கால அளவை மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்க முடியும். விளம்பரத்தில் சில சந்தர்ப்பங்களில், இத்தகைய விளம்பரங்களில் நடிப்பவர்கள் தண்டிக்கப்படுவதில் இருந்து விதிவிலக்கு பெற வகை செய்யப்பட்டுள்ளது.

## நுகர்வோர் குறை தீர்ப்பு

புகாரில் உள்ள பொருளின் மதிப்பை பொறுத்து, மாவட்ட அளவில், மாநில அளவில், தேசிய அளவில் என்று, மூன்று அடுக்குகள் கொண்ட நுகர்வோர் வழக்குகள் தீர்ப்பாயம் அமைக்கப்படும். ஒரு கோடி ரூபாய் வரையிலான மதிப்புடைய பொருட்கள், சேவைகள் பற்றிய புகார்களை மாவட்ட தீர்ப்பாயம் விசாரிக்கும். ஒரு கோடியில் இருந்து பத்து கோடி ரூபாய் வரையிலான மதிப்புடைய பொருட்கள், சேவைகள் பற்றிய புகார்களை மாநில அளவிலான தீர்ப்பாயம் விசாரிக்கும். பத்து கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புடைய பொருட்கள், சேவைகள் பற்றிய புகார்களை தேசிய அளவிலான தீர்ப்பாயம் விசாரிக்கும். புகார்தாரர் எழுத்துப்பூர்வமான புகார்களை தீர்ப்பாயத்தில் அளிக்க வேண்டும்.

மாவட்ட தீர்ப்பாயத்தின் தீர்ப்புகளை மாநில தீர்ப்பாயத்தில் மேல் முறையீடு செய்யலாம். மாநில தீர்ப்பாயத்தின் தீர்ப்புகளை தேசியதீர்ப்பாயத்தில் மேல் முறையீடு செய்யலாம். அங்கும் நீதி கிடைக்கவில்லை என்று கருதும் நுகர்வோர், இறுதியாக உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய முடியும். ஒரு புகார் மீது மூன்று மாதத்திற்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சோதனை கூடங்களில் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய பண்டங்கள் பற்றிய புகார்களுக்கு பொருந்தாது. அது போன்ற பொருட்கள் மீதான புகார்கள் ஐந்து மாதங்களில் தீர்க்கப்பட வேண்டும். ஒரு புகார்தாரர் அளிக்கும் புகார் பற்றி 21 நாட்களில் தீர்ப்பாயத்தில் இருந்து பதில் வரவில்லை என்றால், அந்த புகார் ஏற்கப்பட்டதாக கருதப்படும். தீர்ப்பாயத்தின் முன் விசாரணை நடத்தப்படாமல் எந்த புகாரும் நிராகரிக்கப்பட முடியாது. சமரசம் செய்து கொள்ளவும் இந்த சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட, மாநில, தேசிய தீர்ப்பாயங்களில் சமரச மையங்கள் அமைக்கப்படும். இரண்டு தரப்பினரும் சம்மதித்தால், அவர்களின் வழக்குகள் இந்த சமரச மையங்கள் மூலம் தீர்க்கப்படும்.









திருவள்ளூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பின் மாதாந்திர கூட்டம் சிறப்பாக நடைபெற்றது இக்கூட்டத்தில் இவ்வமைப் பானது அரசின் முகவரி பட்டியலில் இணைக்க பட்டதை கொண்டாடும் விதமாகவும் முகவரி பட்டியலை விளக்கும் விதமாகவும் மாவட்ட தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார் அதன்பிறகு புதிய பொறுப்பாள ராக மாநில துணைத் தலைவராக திரு .

J.Y. ஜேம்ஸ் ஜெயராஜ் அவர்கள் தாளாளர் ஜேக்கப் குழுமம் பள்ளி மற்றும் மாவட்ட மகளிர் அணி தலைவியாக திருமதி.S. சாந்தி அவர்களும் புதிய பொறுப்பாளர்களாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டனர். அதன்பின் மாவட்ட மூத்த ஆலோசகர் மாவட்ட பொறுப்பாளர்கள் கிளை நிர்வாகிகள் தங்களுடைய கருத்துகளை தெரிவித்து பேசினார் ஒவ்வொரு கருத்துக்கும் மாவட்ட தலைவரால் விளக்கமளிக்கப்பட்டது இறுதியாக மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் நன்றியுரை கூறினார் பின்பு மதிய உணவுக்கு பிறகு கூட்டம் சிறப்புற முடிவுற்றது இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் திருவள்ளூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

# காஞ்சிபுரம் மாவட்ட செய்திகள்









காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் Dr.D.C. ஜான் இளங்கோவன், அவர்கள் தலைமையில் 31/10/2020 மூலகழனி கிளையுடன் கலந்தாய்வு மற்றும் வளர்ச்சி கூட்டம் சுதா மருத்துவமனை வளாகத்தில் நடத்தப் பட்டது. இதில் கிளை நிர்வாகிகளும், மாவட்ட நிர்வாகிகளும், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கிராம வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் சிறுகடன் திட்டம்!



**கிராமங்கள் ஓரளவு நகரத்தன்மை கொண்ட பகுதிகள், நகரங்கள் ஆகியவற்றில் உள்ள ஏழைகளுக்கு சிக்கனச் சேமிப்பு, கடன், பிற நிதிச் சேவைகள் மற்றும் சிறு அளவில் உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றை வழங்கி அவர்களின் வருமான நிலையினை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் ஒரு வசதி என்று சிறுகடன் விளக்கப்படுகிறது.**

**அதற்குரிய வட்டி விகிதங்கள் என்ன.**

*1991 ஆம் ஆண்டு நிதிப்பிரிவுச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக வட்டி விகிதச் சீர்திருத்த நடப்புக் காலம் அமைந்தது. இந்தச் சீர்திருத்தச் செயல்பாட்டுக்கு உகந்த வகையில் வங்கி, சிறுகடன் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன்களுக்குரிய வட்டி விகிதங்களும், சிறுகடன் நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள் பயனடையும் உறுப்பினர்களுக்கு வழங்கும் கடனுக்குரிய வட்டி விகிதங்களும் அவர்களே தீர்மானித்துக் கொள்ளுமாறு விடப்பட்டது. கடன் வாங்கும் தனிநபர்களக்கு வங்கிகள் வழங்கும் நேரடிச் சிறுகடன்களுக்குரிய வட்டி விகிதங்களின் மேலுள்ள உச்ச வரையறை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.*

**சிறுகடன் பெறுவதற்குரிய விதிமுறைகளும் நிபந்தனைகளும் எவை..**

*அடிப்படை உண்மைகளை மனதில்கொண்டு தங்களின் கடன் வழங்கும் முறைமைகளை வடிவமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. கடனின் அளவு, நிறுவனத்தின் மதிப்பு, நிறுவனத்தின் அளவு, முதிர்வுக் காலம், சலுகைக்காலம், இலாபங்கள் சேமிப்புப் பொருள்களையும், தொடர்புடைய விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மேற்கூறியவற்றை உள்ளடக்கிக் கருத்தில் கொண்டு உரிய கடன்களையும் சேமிப்புப் பொருள்களையும் வகுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அத்தகைய கடன்கள் ஏழைகளின் வேளாண்மை சார்ந்த, மற்றும் வேளாண்மை சாராத செயல்களுக்கு கடன்கள், கடன்களின் உருவாக்கத்தையும், நுகர்வையும் மட்டுமல்லாது வீடு, தங்கு மிடம்*

போன்றவற்றை அபிவிருத்தி செய்துகொள் வதற்குரிய தேவைகளையும் உள்ளடக்கியது.

**சுய உதவிக்குழு** (SHG-Self Help Group) **என்பது என்ன..**

சுய உதவிக்குழு என்பது ஒரே வகையான சமூக பொருளாதார நிலையைச் சார்ந்தோர் தாமாகவே முன்வந்து தங்களுடைய அவசரத் தேவைகளுக்கு உதவும் வகையிலும், ஒருவருக் கொருவர் உதவும் அடிப்படையிலும் ஒன்று சேர்ந்து சிறுதொகைகளைத் தொடர்ந்து முறையாகச் சேமிக்க ஒத்துக் கொண்டு i) சேமிக்கப்பட்ட நிதியிலிருந்து அவர்களின் அவசரத்தேவைகளுக்காக ii) ஒருவருக்கொருவர் நிதிஉதவி செய்து கொள்ளும் முறையில் அமைந்த ஒன்றிணைந்த தொழில் முனைவோர்களின் சிறிய பதிவுசெய்யப்பட்ட



அல்லது பதிவு செய்யப்படாத அமைப்பாகும். அதன் உறுப்பினர்கள் கடனை உரியமுறையில் பயன்படுத்துவதற்கும் உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துவதற்கும் தங்களுடைய ஒன்றிணைந்த அனுபவ அறிவினையும், தோழமை வற்புறுத்தலையும் (Peer Pressure) பயன்படுத்துகிறார்கள். உண்மையிலேயே தோழமை வற்புறுத்தல்கள் என்பது துணைப் பிணையத்துக்குரிய (Collaterals Security) சக்தி வாய்ந்த மாற்றாக அங்கீகரிக்கப்படுகிறது.

**சுய உதவிக் குழுக்களின் வழியே நிதி வழங்குவதில் உள்ள ஆதாயங்கள் எவை..**

ஒரு குழுவின் ஒரு பகுதியாக ஒரு ஏழைத் தனிநபர் ஆற்றலைப் பெறுகிறார். மேலும் சுய உதவிக்குழுக்களின் வழியே நிதிவழங்குதல் கடன் வழங்கும் முறையில் உள்ள செலவினங்களைக் குறைக்கிறது. பெரிய எண்ணிக்கையில் சிறிய அளவுக்கணக்குகளுக்குப் பதிலாக, கடன்வழங்குவோர் ஒரே ஒரு சுய உதவிக் குழுவின் கணக்கினை மட்டுமே கையாண்டால் போதும். கடன் வாங்குவோர் சுய உதவிக்குழுவின் ஒரு விரிவாகையால், போக்குவரத்துச் செலவினங்களைக் குறைக்கலாம் (வங்கிக்கும் வங்கியிலிருந்து பிற இடங்களுக்கும்) தொடர்புடைய ஆவணங்கள் தொடர்பான பணியினை முடிப்பதற்கும், கடன் பெற வேண்டியும் வங்கிக்குப் பலமுறை சென்று வேலை நாளினை இழக்க வேண்டியதில்லை.

**6. சிறு கடன் வழங்குவதில் அரசு சாரா நிறுவனம் என்ன பங்காற்றுகிறது...**

சிறு தொழில் முனைவோரைக் கொண்ட சுய உதவிக் குழுக்களை நிறுவுதல், கடன் தொடர்புகள் & சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்குவதற் கென வங்கிகளிடமிருந்து பேரளவு நிதிகளைக் கடன்வாங்குதல் போன்ற பணிகளுக்காக அவற்றை வங்கிகளிடம் ஒப்படைத்தல் போன்ற சமூக அளவிலான இடை யீட்டுப் பணிகளை ஒரு அரசு சாரா நிறுவனம் செய்கிறது.

**சிறுகடன் வழங்குதற்கு என்று அண்மை யில் கொண்டுவரப்பட்ட அடையாளக் குறியீடுகள் எவை..**

199192 இல் நபார்டு வங்கியால் ஏழைகளுடன் இணக்கமான வங்கிச் செயல்பாடு கொள்வதை நிறைவேற்றும் நோக்கத்துடன், சிறுகடன் வழங்கும் பொருட்டு சுய உதவிக்குழுக்களையும் வங்கிகளையும் தொடர்புபடுத்தும் ஒரு முன்னோடித்திட்டம் கொண்டு வரப்பட்டது. பின்னர் இந்திய ரிசர்வ் வங்கி இந்தத் தொடர்புத் திட்டத்தில் செயல் முனைப்புடன் பங்கேற்குமாறு வணிக வங்கிகளைக் கேட்டுக் கொண்டது. இந்தத்திட்டம் அதனைத் தொடர்ந்து வட்டார வங்கிகளுக்கும் கூட்டுறவு வங்கிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 2002 மார்ச்சு 31 அன்று சுய உதவிக்குழுக்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட வங்கிகளின் சராசரி எண்ணிக்கை 4,61,478 ஆகும். இதன் வழியே மார்ச்சு 31, 2002

அன்று 7.87 மில்லியன் ஏழைக்குடும்பங்கள் முறையான வங்கிச் சேவைகளுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை உணர்த்துகிறது. வங்கியுடன் இணைக்கப்பட்ட குழுக்களில் 90 விழுக்காட்டுக்கு மேல் மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஆகும். சராசரியாக ஒரு குடும்பத்துக்கு ரூ. 1316/ ஒரு சுய உதவிக்குழுவுக்குச் சராசரியாக ரூ. 22,400/ என்ற அளவில் சுய உதவிக்குழுக்களுக்கு மார்ச்சு 31,2002 இல் வழங்கப்பட்ட மொத்த கடன்தொகை ரூ. 1026.34 கோடிகள் ஆகும். இணைப்புகளின் மாதிரி ஐ வகையில் கூறுவதெனில் மாதிரி மி இடையீட்டினர் இல்லாமல் நேரடியாக சுயஉதவிக்குழுக்களுக்கு/ அரசு சாரா நிறுவனமோ அல்லது முறையான முகவர்களோ இல்லாமல் – 16% மாதிரி மிமி அரசு சாரா நிறுவனங்கள் (NGO), முறையான முகவர்களின் இடையீட்டுடன் நேரடியாக சுய உதவிக்குழுக்களுக்கு 75% மாதிரி மிமிமி ஒரு அரசு சாரா நிறுவனத்தினைச் செயல்படுத்துவோர், அல்லது நிதியளி நிறுவனமாகக் கருதி அந்த அரசு சார் நிறுவனத்தின் மூலம் 9% என்பன மொத்தமாக இந்தத் திட்டத்தின் வகைளாகும். சுய உதவிக்குழுக்கள்/வங்கிகள் இத்தொடர்பு திட்டத்தில் 488 மாவட்டங்கள்/ உள்ளடங்கியுள்ளன. 44 வணிக வங்கிகள் உள்ளிட்ட 444 வங்கிகள் (தனியார் துளையில் உள்ள 17 வங்கிகளையும் சேர்த்து), 191 வட்டார வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் 2155 அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவை அடங்கியுள்ளன.

சுய உதவிக்குழுக்கள் வங்கி தொடர்புத் திட்டம் உறுதியான நிதி வழங்கும் ஒரு திறன்மிக்க சிறுகடன் திட்டமாக வளர்ந்துள்ள நிலையில் வேறு மாதிரி சிறிய நிதிவழங்கும் வழிகளும் தோன்றியுள்ளன.

இவ்வாறு தோன்றியுள்ள மற்ற மாதிரிகள்....

1. சேமிப்பு, கடன் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு வங்கிக் கொள்கைகளின் அடிப்படையில் செயல்பட்டு வாடிக்கையாளர்களுக்கு நேரடியாகவோ அல்லது சுய உதவிக் குழுக்கள் மூலமாகவோ வங்கிச் சேவைகள் வழங்கும் ஒரு இடைப்பட்ட மாதிரி.

2. அரசு சாரா நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்பு ஆகியோரை வாடிக்கையாளர்களாகக் கொண்ட ஒரு மொத்த விற்பனை வங்கித் தொழில் மாதிரி (Whole-sale banking Model). தனது பங்காளிகளுக்கு கடன்வசதியோடு திறமையை கட்டமைத்து உதவிடும் ஒரு புதியோர் கட்டமைப்பாகவும் இந்த மாதிரி விளங்குகிறது

3. மேலும் தனிநபர் அல்லது பொறுப்புடைமை கொண்ட குழுக்கள் ஆகியோரை வாடிக்கையாளர்களாகக் கொண்ட தனிநபர் வங்கித் தொழிலை அடிப்படையாகக் கொண்ட மாதிரி (Individual Banking based Model). இந்த மாதிரியில் திட்ட மேலாண்மையும் வாடிக்கையாளர் சேவையும் சவாலுக்குரியதாய் இருப்பினும், தொழில் முறைவோருக்குக் கடன் வழங்குவதற்குரிய சிறந்த வகை மாதிரியாகும்.

ஏழைகளுக்கும் அமைப்பு சாரா பிரிவினருக்கும் கடன்வழங்கும் இந்த ஒப்புக்கொள்ளக்கூடிய மாதிரிகளைக் கருத்தில் கொண்டு வங்கிகள், அரசு சாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் பலதரப்பட்ட நிறுவனங்கள் இதில் ஈடுபட்டுள்ளன என்பதை மட்டும் கருதாமல், இதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் பல்வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டவை என்பதையும் எண்ணி செயல்திறமிக்க கொள்கை ஆதரவினை வழங்குவதற்கு ஒருங்கிணைந்து இயங்கும் அணுகுமுறையை நோக்கிச் செல்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு சிறுகடன் வழங்குவதில் துணை மாதிரிகளும், போட்டி மாதிரிகளும் சேர்ந்து இருக்கும் வகையில், மேலும் துடிப்பு மிக்க நிலையில் இந்த சிறு நிதிவழங்கல் சூழலை வைக்கும் வகையில் தொடர்ச்சியான சில முன்முனைப்புக் செயல்களை வருகின்ற மாதங்களில் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சிறுகடன் திட்டங்களில் அன்னிய முதலீடு அனுமதிக்கப்படுகிறதா.**

சிறுகடன் திட்டங்களில் வெளிநாட்டினர் பங்கேற்பினை ஊக்கப்படுத்துவதற்காக அன்னிய நேரடி முதலீடு (FDI)/வெளிநாட்டு வணிக அமைப்புகள்(OCB)/இந்தியாவில் வாழாத இந்தியர்கள்(NRI) போன்றவர்களை சிறுகடன்/கிராமியக் கடன் போன்றவற்றினை அனுமதிக்கப்பட்ட, வங்கி அல்லா நிதி நிறுவனங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது. இந்திய அரசின் ஆகஸ்ட் 29, 2000 நாளிட்ட அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இது கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள சிறு உற்பத்தியாளர்களுக்கும் சிறு தொழில்புரி

வோருக்கும் நிதி வழங்கும் வகையில் சிறிய அளவில் கடன்வழங்குவதை உள்ளடக்கியது.

**9. சிறுகடன் மேம்பாட்டு நிதி என்பது என்ன..**

சிறுகடன் வழங்குவோர் தமது நிதி இடையீட்டாளர் சேவைமட்டும் வழங்குதல் என்னும் மிகச் சிறிய நோக்கிலிருந்து வாடிக்கையாளரைப் பற்றிய முழுமைத்தன்மை கொண்ட நோக்குடன் சந்தைக் கட்டமைப்பு, தொழில் நுட்பம் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு ஆகிய தொழில் முனைவோர் மேம்பாட்டுச் சேவைகளையும் உள்ளடக்கிய ஏழ்மை நீக்க அணுகுமுறைக்கு மாற வேண்டும். இந்தச் சூழலில் சிறு கடன் மேம்பாட்டு நிதி ஒரு முக்கியமான படி நிலையைக் குறிக்கிறது. இந்திய நிதி அமைச்சர் தனது 20000l ல் நிதி நிலை அறிக்கையில் அறிவித்ததைத் தொடர்ந்து கீழ்க்காணும் செயல்களுக்குத் துணை செய்வதற்காக நபார்டு(NABARD) வங்கியில் 100 கோடி ரூபாய் உருவாக்கப்பட்டுள்ளது. (அ) சுய உதவிக்குழுவினைரை வெளிப் படுத்துதலும் பயிற்சி அளித்தலும் (ஆ) சிறு நிதி நிறுவனங்களுக்குத் தொடக்க நிதி அளித்தலும் அவர்களின் தொடக்க நிலை நிதிப்பற்றாக்குறையை நீக்குதலும் (இ) சுய உதவிக்குழுக்களை உருவாக்குவதற்கும் வளர்ப்பதற்கும் தேவைப்ட்டும் செலவினங்களை ஏற்றல். (ஈ) சேவை வழங்கும் செயல்முறைகளில் புதிய முறைகளை வடிவமைத்தல் (உ) ஆய்வினை வளர்த்தல், செயல்முறை ஆய்வு மேலாண்மைத்தகவல் அமைப்புகள், சிறுநி திகளில் மிக நல்ல செயல்முறைகளைப் பரப்புதல் என்பன அவை. நிறுவன வளர்ச்சியும் மாற்றமும், நிதிவழங்குவதில் புதிய வளங்களை மதிப்பிடுதல், நிறுவனத்தின் திறனையும் அதன் கொள்திறன் அதிகரிப்பையும் கட்டமைத்தல் ஆகிய நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்கல் விவகாரங்களையும் மேற்கொள்ளும். இந்திய ரிசர்வ் வங்கியும் நபார்டு வங்கியும் ஒவ்வொன் றும் ரூ. 40 கோடியை இந்த நிதியத்துக்கு வழங்கியுள்ளன. எஞ்சிய ரூ. 20 கோடியை 11 பொதுத்துறை வங்கிகள் வழங்கியுள்ளன.

10. இந்தியாவில் எத்தனை வகையான சிறுகடன் வழங்குவோர் உள்ளனர். அவர்களை ஆளுகை செய்யும் இன்றைய ஒழுங்குமுறைச் சட்டம் எது..

**வழங்குவோர் வகை :** அவர்களின் செயல்பாடு களை ஆளுகை செய்யும் ஒழுங்கு முறைச் சட்டம்.

அ) உள்நாட்டு வணிக வங்கிகள்; பொதுத் துறை வங்கிகள்; தனியார் துறை வங்கிகள்; உள்ளூர் வங்கிகள்.

i) இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934

ii) வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949

iii) பாரத ஸ்டேட் வங்கிச்சட்டம் வீஸ்) பாரத ஸ்டேட்வங்கியின் இணை வங்கிகள் சட்டம்

v) கையகப்படுத்துதல் மற்றும் பொறுப்பு மாறுதல் சட்டம் 1970 –1971

ஆ) வட்டாரகிராமப்புற வங்கிகள்.

வீ) வட்டார வங்கிகள் சட்டம் 1976

வீவீ) இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934

வீவீவீ) வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949

இ) கூட்டுறவு வங்கிகள்.

i) கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்

ii) வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 (கிகிசிஷி)

iii) இந்திய ரிசர்வ் வங்கிச்சட்டம் (பட்டியலிடப்பட்ட வங்கிகளுக்கு உரியது)

ஈ) கூட்டுறவுச் சங்கங்கள்.

i) MACS போன்ற மாநிலச் சட்டங்கள்

உ) பதிவு செய்யப்பட்ட வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs)

i) இந்திய ரிசர்வ் வங்கிச்சட்டம் 1934 வீவீ) வணிக நிறுவனங்கள் சட்டம் 1956

ஊ) பதிவு செய்யப்படாத வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs)

இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்திருத்தம் 1997 நடைமுறைக்கு வரும் முன்னர் திமி/ழ்நிதிசி வணிகத்தை நடத்திக் கொண் டிருந்த வங்கிகள் அல்லா நிதி நிறுவனங்கள் (சிஷீஸி க்கு விண்ணப்பித்து இன்றுவரை அவ்விண்ணபங்கள் ரிசர்வ் வங்கியால் மறுக்கப்பட்டப்படாதவை)


எ) சங்கங்கள், பொறுப்பு.

i) கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுச்சட்டம், 1960

ii) இந்திய பொறுப்பு நிறுவனங்கள் சட்டம்

iii) இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934 இன் அத்தியாயம் III C

iv) மாநில வட்டித் தொழிலர் சட்டம்.



**M.R.ஆனந்தன்**
மாநில துணைச் செயலாளர் மற்றும் செய்தி
நிருபர் தமிழ்நாடு நுகர்விழி - 98846 68673

## திருப்பூர் மாவட்ட செய்திகள்







கடந்த 20/11/2020 அன்று தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் பெருந்தலைவர் டாக்டர் பால் பர்னபாஸ் அவர்களின் ஆலோசனைப்படி பேரமைப்பின் திருப்பூர் மாவட்டத்தில் புதிய உறுப்பினர்கள் உறுப்பினர்களாக திருப்பூர் மாவட்ட தலைவர் சிந்து சுப்பிரமணியம் முன்னிலையில் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது திரு மணி என்கிற நித்தியானந்தன் பனியன் நூல் மில் நிர்வாகி ,திரு. அரவிந்தன் நிர்வாகி ஸ்ரீ சாய் சபரி நூல்,திரு சிவகுமார் கோத்தகிரி எஸ்டேட் மற்றும் திருப்பூர் பனியன் நூல் மில் நிர்வாக இயக்குனர் ஆகியோருக்கு நுகர்வோர் அமைப்பின் ஆயுள் உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்ட நிகழ்ச்சிகள்.



தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் பெரும் தலைவர் டாக்டர் சி பால் பர்னபாஸ் அவர்களின் ஆலோசனைப்படி corono corono corono வின் பாதிப்பால் பாதிக்கப்பட்ட வேலை இழந்து தினசரி கூலி தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு பேரமைப்பின் மாநில துணை பொது செயலாளர் திருப்பூர் சிந்து சுப்பிரமணியம் அவர்கள் தனிப்பட்ட முறையில் சொந்த செலவில் வேலையிழந்த தினசரி கூலி தொழிலாளர் குடும்பங்களுக்கு திருப்பூர் அலுவலகத்தில் வைத்து சுமார் 28 குடும்பங்களுக்கு முதல் தரம் சாப்பாடு அரிசி சிற்பங்கள் கொடுக்கப்பட்டது இதில் பேரமைப்பின் உறுப்பினர் எக்ஸ்போர்ட் பனியன் கம்பெனி உரிமையாளர் திரு அண்ணாதுரை அதிமுக காளிமுத்து dmk சுப்பிரமணியம் நுகர்வோர் அரிகரன் cpi மைக் ராஜேந்திரன் மற்றும் பலர் பங்கேற்றனர் திருப்பூரில் நுகர்வோர் அமைப்பில் பல வருடங்களாக செயல்பட்டு தற்பொழுது தனது வலது காலை இழந்து பாதித்திருக்கும் திரு ராமகிருஷ்ணன் அவர்களுக்கு அவர்களின் வீட்டிற்கு சென்று அரிசி சிற்பம் வழங்கப்பட்டது நன்றி




3=10=2020=சனிக்கிழமை காலை 10 மணி அளவில் திருப்பூர் மாநகராட்சி இரண்டாம் மண்டலம் டிஎம்கே புரத்தில் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கட்டிடம் கட்டுவதற்காக ரூபாய் 19.5 லட்சம் அரசால் ஒதுக்கப்பட்ட அடிக்கல் நாட்டு விழாவில் திருப்பூர் சிந்து சுப்பிரமணியம் மாநில துணை பொதுச் செயலாளர் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு மற்றும் அகில இந்திய மக்கள் உரிமை பாதுகாப்பு கழகம் அவர்களுடன் வலதுபுறம் அடுத்து இரண்டாம் மண்டலம் துணை ஆணையாளர் மேன்மைமிகு செல்வநாயகம் அடுத்து திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கே எஸ் விஜயகுமார் அடுத்து இரண்டாம் மண்டலம் முன்னாள் தலைவர் ஜே ஆர் ஜான் அடுத்து முன்னாள் மண்டலத் தலைவர் தலைவர் ராதாகிருஷ்ணன் மற்றும் முன்னாள் கவுன்சிலர் கணேஷ் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியை அவர்களுடன் கட்டட ஆரம்ப விழா இனிதே நடைபெற்றது நன்றி



15 7 20 திருப்பூர் மாவட்டம் ஆட்சியர் அலு வலகத்தில் திருப்பூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு துறை அதிகாரி மற்றும் திருப்பூர் மாவட்ட வழங்கல் அதிகாரி மற்றும் துணை ஆட்சியர் அவர்கள் மேன்மைமிகு முருகன் சார் அவர்கள் இடம் மாற்றலாகி செல்லுவதால் அவருக்கு பிரிவு உபசார விழா நடந்ததில் சிந்து சுப்பிரமணியம் மாநில துணை பொதுச்செயலாளர் மற்றும் அகில இந்திய மக்கள் உரிமை பாதுகாப்பு கழகம் மற்றும் தாசில்தார் சிவக்குமார் தாசில்தார் திருமதி அம்சவேணி மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தாசில்தார் ஒன்பது பேர்களும் மற்றும் அலுவலக உதவி யாளர்களும் கலந்துகொண்டது நன்றி

திருப்பூர் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் எரிவாய்வு. Ipg. நுகர்வோர் குறைதீர் கூட்டம் திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் dro. மற்றும் மாவட்ட வழங்கல் அதிகாரி. Dso. அவர் களின் தலைமையில் இன்று. 6, 10, 20 மாலை 5 மணி அளவில் நடைபெற்றது சிந்து சுப்பிரமணியம் மாநில பொதுச் செய லாளர் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு. மற்றும் அகில இந்திய மக்கள் உரிமை பாதுகாப்பு கழகம் சார்பாக கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் நன்றிகள்



# தகவல்களை வெளியிடுவது அரசுகளின் கடமை

**தகவல் அறியும் உரிமைச் சட்டம் காரணமாக அரசின் திட்டங்கள், அவற்றின் நிலைகுறித்து மக்களுக்கு முன்பைவிட நிறைய தெரிய ஆரம்பித்துள்ளன.**

ஆனால், இந்தச் சட்டம் குறித்தும், அரசு தெரிவிக்க வேண்டிய தகவல்கள் எவை என்பது குறித்தும் தொடர்ந்து குழப்பங்களும் தயக்கங்களும் நிலவுகின்றன.

யாராவது கேட்க வேண்டும் என்று காத்திருக்காமல், அரசே ஒவ்வொரு திட்டம் குறித்தும் தகவல்களைத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்கிறது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 4வது பிரிவு. ஆனால், இப்படி நடப்பது வெகு அபூர்வம்தான்.

பயனற்ற கேள்விகளை மக்கள் கேட்கிறார்கள் என்றும், சில தரவுகளைத் தகுதி கேட்பவர்களுக்கு இல்லை என்றும் முன்வைக்கப்படும் வாதம் ஏற்புடையதல்ல.

தகவலைக் கேட்கும் விண்ணப்பதாரர், அந்தத் தகவல் தனக்கு ஏன் தேவைப் படுகிறது என்று காரணம் சொல்லத் தேவையில்லை என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 6(2) பிரிவு தெளிவாகக் கூறுகிறது.

அரசிடம் தகவலைக் கேட்க ஒரு குடிநபர் அத்துடன் சம்பந்தப்பட்டவராகவோ பாதிக்கப் பட்டவராகவோதான் இருக்க வேண்டும் என்றால், அதிகாரிகள் தங்கள் நோக்கப்படி விளக்கம் அளித்து, ‘உங்களுக்கு இந்தக் கேள்வியைக் கேட்கும் தகுதி கிடையாது’ என்று நிராகரித்துவிடக்கூடும்.

நிராகரிக்கும் அளவு படிப்படியாகக் குறைந்து 2018-19ல் 4.7% ஆகியிருக்கிறது. கேட்பவருக்குத் தகுதி இருக்கிறதா என்று பார்க்கத் தொடங்கினால், விண்ணப்பங்களை நிராகரிக்கும் அளவும் அதிகரித்துவிடும். அதற்கு இடம் தரக் கூடாது.

தகவல் அறியும் உரிமைக்குப் பெரிய இடையூறாக இருப்பது மத்திய, மாநில தகவல் ஆணையங்களில் நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்கள்தான்.

இது தொடர்பாகத் தாக்கலான மனுவை அனுமதித்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தலைமையிலான மூன்று உறுப்பினர் அமர்வு, காலியிடங்களை விரைந்து நிரப்புமாறு மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

தகவல்களைக் கொடுக்க அதிகார வர்க்கம் தயங்குகிறது, அதனாலேயே செயலற்ற தன்மையும் நிலவுகிறது என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மத்திய தகவல் ஆணையருக்கு 2018 நவம்பரில் ‘வெளிப்படையான செயல்பாட்டுத் தணிக்கை அறிக்கை’ தரப்பட்டது.

உங்களுடைய நிறுவனம் தொடர்பான தரவுகளைத் தாருங்கள் என்று 2,092 பொது அதிகாரிகளிடம் கேட்கப்பட்டது. அவர்களில் 838 பேர் (40%) மட்டும் பதிலளித்தனர். பொது அதிகாரிகளில் 35% பேர் அளித்த தரவுகள் திருப்திகரமாக இல்லை.

தங்களுடைய நிறுவனத்தின் செயல்கள், ஒதுக்கப்பட்ட நிதி, செயல்படுத்திய திட்டங்கள், இவற்றுடன் இணைந்த பிற தகவல்களைத் தர பொது அரசு அமைப்புகள் தவறிவிட்டன. மத்திய தகவல் ஆணையத்திலும், மாநில தகவல் ஆணையர் இல்லத்திலும் ஊழியர் பணியிடங்கள் தொடர்ந்து காலியாகவே இருக்கின்றன. மத்திய தகவல் ஆணையத்தில் மட்டும் 4 பதவிகள் நிரப்பப்படவில்லை, 33,000 மனுக்கள் தேங்கிவிட்டன. உச்ச நீதிமன்றம் இதைச் சுட்டிக்காட்டி இருப்பதால் மத்திய, மாநில அரசுகள் இந்தக் குறைகளைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நன்றி : தி இந்து தமிழ் நாளிதழ் 20.12.2019**

Published by : C. Paul Barnabas. on behalf of Tamilnadu Consumer Protection Organisation, Chennai.
From its Office at No.2, Thirumuruga Nagar, Kolathur,Chennai - 600 099.
Printed by : Mr. H. Dhanasekaran at Sekar Offset Printers
No.168, Big Street, Triplicane, Chennai - 600 005.
Editor : Dr. N. Kanniah, *Phd*

**Head office : No.359 G, Konnur High Road (Pill Kington Road Junction) Ayanavaram, Chennai - 600 023. Tamilnadu, India.(Near Sayani Bus Stop & Sangeetha Mobiles )**
**Phone : 044 - 4332 4844, Cell : 99419 44999 / 94449 09993**
**E-mail : presitncpo@gmail.com, Website : www.tncpo.com, Facebook : TNCPO Chennai**



**Dr.G.T. அன்பரசன்**
மாவட்ட அமைப்பாளர் (யோகா)
98405 60066



**S. ஜெகன்பாபு**
திருவல்லிக்கேணி பகுதி தலைவர்
98842 37456



**V. சுகிர்தயராஜ்**
மாநில உதவிச் செயலாளர் (இ.அ.)
90443 90443



**M.வருண்பிரசாத்**
மாநில துணை அமைப்பாளர்
88257 39714



**P. நவநீதன்**
மாநில துணை அமைப்பாளர்
97911 02345



**T.ராஜேஷ்**
மாநில துணை ஒருங்கிணைப்பாளர்
74016 66677



**J. கோபாலகிருஷ்ணன்**
காஞ்சிபுரம் மாவட்ட இ.செயலாளர்
95512 56257



**A.Y.பொன்வேல்**
சென்னை மாவட்ட துணை செயலாளர்
98400 39439



**V.M.கனிசெல்வம்**
மடிப்பாக்கம் கிளைச் செயலாளர்
98408 27182



**B. நிதிஷ்குமார்**
மடிப்பாக்கம் கிளை இ.செயலாளர்
88255 53646



**S.சுபாஷினி**
செயலாளர், திருவல்லிக்கேணி பகுதி
99412 49377



**S.யோகேஷ்வரி நாயுடு**
மடிப்பாக்கம் கிளை பொருளாளர்
98331 26863



**M. சையத் காசிம்**
69 வது வட்டத் தலைவர்
98404 85909



**S.ராஜேந்திரன்**
கே.கே.நகர் பகுதி நிர்வாகி
91762 93525



**H. அப்துல்லா செரீஃப்**
மடிப்பாக்கம் கிளை து.செயலாளர்
98846 76417



**சையத் அப்சர்**
69வது வட்டச் செயலாளர் - சென்னை
84282 68874

**Wish you Happy Christmas**

## பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள்

ADVT

TAMILNADU NUGARVIZHI (Tamil Monthly) Registered News Paper - R.N.I. No: TN/T AM/2007/23434, Postal Registration No: TN/TBM/118

தமிழ்நாடு

# நுகர்விழி

**மாத இதழின் வாசகர்கள்
மற்றும் இந்த இதழ் வெற்றிபெற
பெரும் ஆதரவு வழங்கிய
பேரமைப்பின் நிர்வாகிகள் மற்றும்
உறுப்பினர்கள் அனைவருக்கும்
இனிய கிருஸ்துமஸ் தின
நல்வாழ்த்துக்கள்**

- டாக்டர் செ. பால்பர்ணபாஸ்
தலைமை நிருபர் மற்றும் வெளியீட்டாளர்
தமிழ்நாடு நுகர்விழி &
கன்ஸ்யூமர் டுடே

